பாதுகாவலன்

PATHUKAVALAN


| | | |
|---|---|---|
| | [illegible] | [illegible] |
| | [illegible] | 375 |
| | [illegible]வலி | 315 |
| | பாஷையூர் | 315 |
| 5 | நாவாந்துறை | 300 |
| 6 | பேசாலை | 250 |
| 7 | சில்லாலை | 250 |
| 8 | மன்னார்பேராலயம் | 222 |
| 9 | மாதகல் | 212 |
| 10 | வங்காலை | 210 |
| 11 | பருத்தித்துறை | 208 |
| 12 | மானிப்பாய் | 205 |
| 13 | பாண்டியன் தாழ்வு | 201 |
| 14. | யாழ். பேராலயம் | 190 |
| 16. | புதுக்குடியிருப்பு | 165 |


மலர்: 116 இதழ் : 20 08-6-1990 ( ஜுன் 8 — ஜுன் 15 ) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு விலை ரூபா 2/=


## நூறுவீதம் கத்தோலிக்கர் உள்ள மோல்டாதீவுக்குச் சென்ற திருத்தந்தை திருச்சபையைக் கட்டி எழுப்புவதில் குருக்களின் பணி பற்றிக் கூறினார்

# குருக்கள் துறவிகளின் பணியானது மாற்று ஈடு செய்ய முடியாத பணி

**மே 25 ஆம் திகதி மோல்ட்டா தீவுக்குச் சென்ற திருத்தந்தை குருக்களின் மாற்றீடு செய்ய முடியாத பணியைப் பாராட்டி, பரிசுத்த ஆவி 2 ஆம் வத்திக்கான் சங்கத்தின் மூலம், அனைத்து இறைமக்களையும் அழைத்துச் செல்லும் உயர்ந்த, ஆணித்தரமான புதுப்பித்தலுக்கு இட்டுச்செல்லுமாறு கேட்டுள்ளார்.**

சின்னப்பர் சிறைப்பிடிக்கப்பட்டு உரோமைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது கப்பல் கடலில் மூழ்கியதால் மோல்ட்டாதீவில் கரைஒதுங்கி நற்செய்தியைப் போதித்தார். (அப். பணி 27: 6 – 28: 10) இன்று அங்குள்ள 3, 50, 000 பேருமே கத்தோலிக்கர்கள். 75% மக்கள் ஞாயிறு திருப்பலியில் பங்குபற்றும் இத்தீவுக்கு திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர் சென்ற 25–27 திகதிகள் சென்றிருந்தார்.

திருச்சபையைக் கட்டி எழுப்பும் பணியிலே குருக்கள் துறவிகளின் பணியானது ஈடு செய்ய முடியாதது எனக் கூறிய திருத்தந்தை மீட்புக்கு அழைத்துச்செல்லும் பரிசுத்தனத்தை உயர்ந்தவர் முதல் தாழ்ந்தவர்வரை அனைவரும் பெற்றுக்கொள்ள வழிவகுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

ஆயர்களுடன் இணைந்து குருக்களும், துறவிகளும் அனைத்து இறைமக்களையும் பரிசுத்த ஆவி 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் மூலம் காட்டும் உயர்ந்த, ஆணித்தரமான புதுப்பித்தலுக்கு இட்டுச் செல்ல வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

## கொழும்பு தமிழ் மறையாசிரியர் தினம்

கொழும்பு மறையாசிரியர் தினம் தேவத்தை ஞானொடுக்க இல்லத்தில் வைகாசித் திங்கள் 22 ஆம் நாள் நடைபெற்றது. கொழும்பு மறை மாவட்டத்தின் தமிழ்பேசும் மக்கள் வாழும் 8 மறைவட்டாரங்களிலும் உள்ள 26 பங்குகளில் பணியாற்றும் 180 மறை ஆசிரியர்கள் இந்த வைபவத்தில் பங்கு கொண்டனர்.

பிரதம விருந்தினராக சென்றிருந்த பேரருள் திரு. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் ''மறையாசிரியர் பணி ஓர் தெய்வீகப்பணி. மறையாசிரியர்களாகிய நீங்கள் இப்பணியை உங்களுங்கள் பங்குகளில் ஆற்றுவதன் மூலம் எம் சிறாரை விசுவாச வாழ்வில் வழி நடத்துகிறீர்கள்'' என்றார்.

கௌரவ செயலர் திரு. அம்புறோஸ் பீற்றர் அனைவரையும் வரவேற்றார். இயக்குனர் அருட்திரு. சிறில் பெரேரா அடிகளும், தமிழ் பகுதி இயக்குனர் அருட்செல்வி பெனடிக்ரா (தி. சி) அவர்களும் இதில் பங்கு பற்றினர். இயக்குனர் தமது உரையில் தமிழ்ப்பிரிவு இயக்குனர், மற்றும் சில தகைமை பெற்ற மறையாசிரியர்கள் ஆற்றும் சேவைகள் பற்றியும் பாராட்டி மென்மேலும் உற்சாகத்துடன் மறையாசிரியர்கள் சேவையாற்ற முன்வரவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

உதவி செயலர் திரு. யூலியன் இமாட், திருமதி. ஆன் பிலிப் ஆகியோர் நன்றி உரைகள் நவின்றனர்.



கொழும்பு தேவத்தை தியான இல்லத்தில் மே 22 அன்று கொழும்பு மறைவட்ட தமிழ் மறையாசிரியர் தினத் திருப்பலியை திருமலை—மட்டுநகர் ஆயர் பேரருள்திரு. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையுடன் மறைக்கல்வி இயக்குனர் அருள்திரு. சிறில் பெரேரா, தமிழ் பிரிவு இயக்குனர் அருள்செல்வி பெனடிக்ரா (சி. தி.) மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்கின்றனர்.

## ஆண்டு நிறைவு

இராமநாதபுரம் புனித ஆரோக்கியநாதர் பந்தி வின்சென் டி போல் சபைஆரம்பித்து ஓர் ஆண்டு நிறைவு விழாவை மேமாதம் 14ஆம் திகதி கொண்டாடினது. இச்சபையை 89ஆம் ஆண்டு மே

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## பொதுநிலையினர் கருத்தரங்கு

வைகாசி 25–ம் நாள் மாலை 5–30 மணியளவில் மன்னார் பொது நிலையினர் பேரவை உறுப்பினர் மடுத்திருப்பதியில் இயக்குனர் அருள்திரு. சேவியர் குரூஸ் அடிகளாரின் தலைமையில் ஒன்றுகூடினர். மட்டுநகர் மறைவட்ட அருள்திரு. சாமிநாதன் அடிகளார் கருத்தரங்கை நடத்தினார். செல்வி அந்திரேஸ்பிள்ளை அவர்கள்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## ஆடித்திருநாளுக்கு பேராயர்

மடுத்திருப்பதியில் ஆடி 2 திருவிழாவுக்கு, கொழும்பு மறை மாவட்ட பேராயர் பேரருள்திரு. நீக்கிலஸ் மாக்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களை தலைமை தாங்கும்படி மன்னார் மறைவட்ட ஆயர் பேரருள்திரு. தோமஸ் சவுந்திரநாயகம் ஆண்டகை அழைப்பு விடுத்துள்ளார்கள். இவ்வாண்டு ஆடித் திருவிழாவுக்கு வேண்டிய ஏற்பாடுகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## வங்காலையில் வைகாசி வழிபாடு

பங்குத் தந்தை அருள்திரு. போல் நட்சத்திரம் அடிகளார் வங்காலையில் அன்னையின் வைகாசி மாதவழிபாடுகளை மகத்தான முறைகளில் நடாத்தினர்.

பங்குப் பொதுநிலையினரின் அனைத்துப் பக்திச்சபையினர் பங்கின் வட்டாரம் வட்டாரமாகத் திட்டங்கள் வகுத்து வட்டாரங்களிலும், ஆலயத்

(தொடர்ச்சி 8 ஆம் பக்கம்)

## நவாலி எஸ். வி. பி.

''உண்மையான மனிதனுக்குரிய அடையாளம் அவனுள் பொதிந்திருக்கும் இரக்க சுபாவமே. இரக்கமற்ற இதயம் கொண்டவன் மனிதனாய் வாழத் தகுதியற்றவன். புனித வின்சென் டி போல் சபை ஸ்தாபகர் பிரடெறிக் ஓசானம் அவர்கள் போர்ப்பரம்பரையில் தோன்றினாலும், ஏழைகளின்மேல் கொண்ட இரக்கம் இச்சபையை ஸ்தாபிக்கத் தூண்டியது. வின்செந்தியர்களும் இரக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றுங்கள்''

மேற்கண்டவாறு புனித

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம்கருத்து

### படைக்கப்பட்ட கடவுள்?

புனித அந்தோனியார் பக்தர் சிலருக்கு அவரே கடவுளாகத் தென்படுகின்றார். புனித யூதாததேயுவின் பக்தர்களுக்கு அவரே கடவுள். இவ்வாறாக பல்வேறு மக்களும் தமக்கென கடவுள்களைச் சிருட்டித்து அதிலே மனநிறைவைக் காண முற்படுகின்றனர். சூரியனை, சந்திரனை, நீரை, நெருப்பை, படைக்கப்பட்ட பொருட்களை அவற்றில் கண்ட வியத்தகு சக்தியின் காரணமாக மனிதன் கடவுளாகக் கணித்துவந்தான்.

பல்வேறு தெய்வங்களை ஏற்று, வழிபட்டு வந்த மக்கள், அவற்றின் குறைபாட்டை இனங்கண்டு ஓரிறைக் கோட்பாட்டை வளர்க்கத் தொடங்கினர். கிறிஸ்துவின் காலத்திலே வளர்ச்சி அடைந்திருந்த யூதேய மரபிலே இறைவனைப் பெயர் சொல்லி அழைப்பதற்கும் தயங்கினார்கள் மக்கள். அந்த அளவுக்கு ஓரிறைக் கோட்பாடு மத்தியதரைக் கடலைச் சார்ந்த பகுதிகளில் வளர்ச்சியடைந்திருந்தது.

ஞாயிறு தினத்தன்று பரிசுத்த திரித்துவத்தின் விழா கொண்டாடப்படுகிறது. ஒரே கடவுள் மூன்று ஆட்கள் என்ற மறைபொருளான இறைத் தன்மையைப் போற்றி பரிசுத்த திரித்துவத்துக்கு விழா எடுக்கின்றோம். பல தெய்வ வழிபாடுகளில் ஈடுபட்டு வரும் மக்கள் மத்தியில் வாழும் சூழ்நிலைகளில் திரித்துவத்தின் தன்மையை நாம் நன்கு உணர்ந்திருக்க வேண்டும்.

யூதேய மதத்தைப் பின்பற்றி வந்த மக்களும், யூதரல்லாத புறவினத்தாரும், கிறிஸ்தவ மதத்தைத் தழுவியபோது, அதுவரை மத்திய தரைக் கடலைச் சார்ந்த பகுதிகளில் வளர்ந்திருந்த ஓரிறைக்கோட்பாட்டை எந்த விதத்திலும் பாதிக்காத விதத்திலே அவர்கள் கிறிஸ்துவின் இறைத்தன்மையை விளங்கிக் கொண்டனர்.

பரிசுத்த திரித்துவத்தைப்பற்றிய அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டபோது திருச்சபையிலே பல்வேறு தப்பறையான போதனைகள் அன்று தலைதூக்கின. மக்கள் பல்வேறு விதமான விளக்கங்களைக் கொடுத்து கிறிஸ்துவின் தெய்வீகத்தை, மனிதத் தன்மையை, ஆள்த்தன்மையைப் பற்றி ஆராய்ந்தனர். திருச்சபையிலே இந்த பேதங்களின் விளைவாக கருத்துத் தெளிவு ஏற்பட்டு விசுவாச சத்தியங்கள் உறுதிப்படுத்தப்பட்டன என்றே கூறவேண்டும். அவ்வப்போது திருச்சபைப் பொதுச்சங்கங்கள் ஜெருசலேம், நீசேயா, கொன்ஸ்தாந்திநோப்பிள், எபேசு, கல்சதோன் போன்ற இடங்களில் கூட்டப்பட்டு, தவறான போதகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

புனிதர்களுடைய செயல்களையும், புனிதத்துவத்தையும் தியானித்து, அவர்களைப் பின்பற்ற வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே திருச்சபை புனிதர்களுக்கு தனி இடத்தைத் தந்திருக்கிறது.

புனிதர் நிலைக்கு திருச்சபையால் உயர்த்தப்பட்ட அனைத்துப் புனிதர்களுமே, உண்மையான இறைவனை அறிந்து, ஏற்று, விசுவசித்து அதற்காகத் தம்மைத் தியாகம் செய்தவர்கள். ஆகவே அவர்களைப் போற்றுபவர்கள், அவைகளைப் பின்பற்ற வேண்டும். அவர்கள் தம் வாழ்வில் கடைப்பிடித்ததைப் பின்பற்ற வேண்டும்.

ஆனால் இன்று நாம் காணும் புனிதர்களின் பக்தர்கள், புனிதர்களைக் கடவுளாக்கி, ஒரே கடவுள் என்ற உண்மைக்குப் புறம்பான முறையில் சான்று பகர்வதுபோல் காட்சி அளிக்கின்றனர்.

திரித்துவத்தின் திருநாளில் நாம் உண்மை இறைவனைக் காட்ட முன் வருவோம். படைக்கப்பட்டவைகளை படைக்கப்பட்டவைகளாகக் கண்டு கொள்வோம்.

## தேனருவி

### தூய திரித்துவப் பெருவிழா (10-06-90)

### ஒன்றிப்பின் பிரதிபலிப்பு

உலகம் சுருங்கி விட்டது. பூமி ஒரு சிற்றூராகி விட்டது. சில வருடங்களுக்கு முன்னர் சில மாதங்களே எடுத்த நீண்ட பயணங்கள் தற்போது சில மணித்தியாலங்களுள் முடிவுறும் துரித பயணங்களாகி விட்டன.

உலகின் ஒரு மூலையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் ஒரு சில நிமிடங்களில் பாரெங்கும் பரந்திடும் செய்தி அலைகளாக மாறிவிடுகின்றன. பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பால் வாழும் நண்பர்களோடு காதோடு காதாகப் பேச வாய்ப்புக்கள் பல உண்டு. இத்தனைக்கும் காரணம் மனித ஆற்றலின் சாதனையும், சமூக தொடர்பு சாதனங்களின் பரிணாம வளர்ச்சியும்தான்.

நேரத்தாலும், தூரத்தாலும் இடைவெளி குறுகிக்கொண்டு போனாலும்; மனிதனுக்கும், சக மனிதனுக்குமிடையே இடைவெளி அதிகரித்துக் கொண்டு போகிறதே வேறுபட்ட பண்பாட்டு, கலாச்சார, நடை உடை பாவனை மத்தியில் கூடல் ஏற்பட்டாலும்; மனிதர் மத்தியில்ஊடல் பெருகுதே. நாடுகள், இனங்கள், சமூகங்கள் மத்தியில் நாளும் பேச்சுவார்த்தைகளும் ஒப்பந்தங்களும் இடம் பெறினும்; மனிதன் தன் சொந்த சகோதரங்களையே அந்நியப்படுத்திக் கொண்டு போகிறானே. வீட்டுக்கு வீடு தொடர்பு சாதனங்கள் அதிகரித்துக்கொண்டே போகும் அதே வேகத்தில் உறவுகளில் பிளவுகளும், பிணக்குகளும் மலிந்தே செல்கின்றன.

இப்படிப்பட்ட சூழலில் திரித்துவப் பெருவிழா ஒரு வெறும் மறைபொருளாகவும் புத்திக்கு எட்டாத பதிராகவும் மறைந்து விடக்கூடாது. வெறும் சம்பிரதாயத்திற்காக விழாக்களை எடுக்கக்கூடாது. இதை இன்றைய தலைமுறை வலுவாக எதிர்க்கிறது.

இறைவன் தந்தை, மகன், தூயஆவி வடிவிலே செயலாற்றுவதற்கு வேதாகமத்தில் பல ஆதாரங்கள் உண்டு. அவருடைய செயற்பாடு அடிப்படையில் மீட்பின் செயற்பாடாகவே விளங்குகிறது. சமூக, அரசியல், பொருளாதார, ஆன்மீக அடிமைத்தனங்களில் இருந்து விடுதலை வழங்க ஆதியிலிருந்து ஆண்டவர் செயல்புரிகிறார். மீண்டும், மீண்டும் மனிதனைத் தம்மோடும், அயலவரோடும் இணைக்க உடன்படிக்கைகளைச் செய்து வருகிறார்.

வணங்காக் கழுத்துள்ள பிரிவினை கோரும் இஸ்ரவேல் மக்களை இறைவனுடன் இணைக்க மோயீசன் பாடுபடுகிறார். தனித்தனித் தீவுகளாகச் செயல்பட்டு வந்த கொரிந்து வாழ் மக்களை அன்பிலும், நட்பிலும் இணைக்க புனித சின்னப்பர் அறிவுரைக்கு மேல் அறிவுரை கூறுகிறார். புரட்சி புரிந்து தம்மை அழித்துக் கொண்ட பரிசேய, சதுசேய கூட்டத்திற்கு மீட்பு வழங்க தம்மையே பலிசெய்வதாகச் சாட்சி பகர்ந்தார் இயேசு பெருமான்.

இன்றும் சமயம் வேண்டும் ஏனெனில் அது மனிதனை ஒற்றுமையிலும், சகோதரத்துவத்திலும் இணைப்பதற்காகவே இயங்குகின்றது. சமயத்தை மனிதன் உண்டாக்கினானா என்று கேட்பதிலும் பார்க்க சமயம் மனிதனை உண்டாக்குகிறதா? என்று கேட்க வேண்டும்.

ஆதியில் இருந்து இன்றும், என்றும் இறைவன் மூன்று வடிவத்தில் செயலாற்றினும் அவரில் அன்பு, நட்பு, சமத்துவம், சமாதானம் குறைவுபடாமல் நிறைந்திருந்தன.

மூவொரு கடவுளுக்கு நாம் கூறும் வாழ்த்தும், புகழும், மகிமையும் வெறும் உதட்டில் எழும் மன்ன மொழியாய் இராமல் எம் வாழ்வால் அவரை வாழ்த்துவோம். எம் குடும்பத்திலும், குழுமத்தியிலும், பங்குத்தளங்களிலும் தொடர்புகளை ஏற்படுத்துவோம். திரித்துவத்தின் செயற்பாட்டிற்கமைய நோக்கத்தில் ஒரே மனத்தோராய் விளங்குவோம். மனித உறவுகளில் மிளிரும் ஒன்றிப்பு திரித்துவ தேவனின் பிரதிபலிப்பாக அமையட்டும்.

**சுவாமி ஜீவா போல் அ.ம.தி.**

யாத். 34 : 4–9 எங்களுடன் நீரே எழுந்தருளும்.
கொரி 13 : 11 – 13 ஒன்றுபட்டு வாழுங்கள்.
அரு. 3 : 16 – 18 உலகம் மீட்படைய தந்தை மகனை அனுப்பினார்.

## கலைநிலா

'கலை நிலா' விற்கு பொறுப்பானவர் 'மதி'. அவர் யாருடைய படைப்புகள் என்றாலும் சரி பாரபட்சமின்றி விமர்சிப்பவர். இவ்வகையில் தேவதாசனின் 'வித்துக்களை' விமர்சித்ததில் எதுவித ஆச்சரியமுமில்லை. அவரது விமர்சனத்தைப் படித்த தேவதாசன் இன்று, கலை நிலாவில் ஒருசில விளக்கங்களைத் தருகின்றார்.

திருமறைக் கலா மன்ற வெளியீட்டுக்குழு.

25–05–1990 இல் வெளியான 'பாதுகாவலன்' பத்திரிகையில் 'கலை நிலா' என்ற பகுதியில் 'மதி' என்பவரால் எனது 'வித்துக்கள்' என்ற தென்மோடி நாட்டுக்கூத்துக்கு எழுதிய விமர்சனத்திற்கு பதிலளிக்க வேண்டியது எனது கடமையும் பொறுப்புமாகும்.

'ஆலயத் திருவிழாக்களில் மட்டும் ஆடப்பட்டும், தாழ்த்தப்பட்டோரின் கலை வடிவம் என்று கருதப்பட்டும் வந்த நாட்டுக்கூத்து' என்று விமர்சகர் நாட்டுக்கூத்துக்கு முதலில் வரைவிலக்கணம் கூறுவது தவறு.

கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிய ஊர்காவற்றுறை, சில்லாலை, மாதகல் பகுதி வாழ் மக்களும், யாழ்ப்பாணக் கரையோரப்பகுதிகளில் வாழ்ந்த மக்களும், மன்னார், மாந்தோட்டம், மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் வாழ்ந்தவர்களும் இந்தக் கிறீஸ்தவ தென்மோடி, வடமோடி நாட்டுக்கூத்தை இன்றுவரை காப்பாற்றி வந்திருக்கிறார்கள்.

ஈழத்தில் கி. பி 1505 ஆம் ஆண்டுக்கு பிற்பாடே தென்மோடி, வடமோடி நாட்டுக் கூத்துக்கள் அறிமுகம் செய்யப்பட்டன. தென்நாட்டிலிருந்து வந்த கிறிஸ்தவ மத குருமார் அறிமுகம் செய்தது தென்மோடிநாட்டுக் கூத்தென்றும், வட நாட்டிலிருந்து வந்த மத குருமார் ஈழத்தில் அறிமுகம் செய்தது வடமோடி நாட்டுக் கூத்தென்றும் ஈழத்தில் பாகுபாடு செய்யப்பட்டது.

தமிழ் மக்களின் பாரம்பரிய கலைகளில் 'காத்தான் கூத்து' 'காமன் கூத்து' என்பன ஈழத்தில் கி. பி. 1505ஆம் ஆண்டுக்கு முன் ஏற்பட்ட தேசிய கலை வடிவங்களாகும். இக் கலைவடிவங்கள் மத வேற்றுமை காரணமாக கிறிஸ்தவ தென்மோடி வடமோடி நாட்டுக்கூத்துக்களில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. கிறீஸ்தவ தமிழ் மக்கள் தமிழ்க்கலை வடிவங்களை வளர்ப்பதில் தமிழ் இலக்கிய வரலாற்றில் பங்களிப்பு செய்தார்களென்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும்.

எனவே, கிறீஸ்தவ தமிழ் மக்கள் பழைய தேசிய கலை வடிவங்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற காரணத்தாலே, 'காத்தவராயன்' கூத்திலுள்ள'காத்தான் கூத்து'மெட்டையும் அதே வர்க்கத்தைச் சேர்ந்த, 'வளையலோ வளையல், வளையல் வாங்கலை

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள்பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்




## 23. மிலான் அரச சாசனம்.

கி. பி. 305 இல்
தியோக்கிளேசியன் பதவி துறந்தான்.
மாக்சிமியனையும் அவ்வாறே செய்யப்பணித்தான்.
அதனால்
கிழக்கில் கலிலேயுவின் ஆட்சியும்
மேற்கில் கொன்தான்ஸ் குளோரின் ஆட்சியும் வலுத்தது.
அவர்கள் 'அகஸ்துஸ்' பட்டமும் பெற்றனர்.
கலேரியுரி, லிசினஸ், மாக்சிமின் ஆகியோரை சீசர்களாகவும்
குளோர் செவருஸ் என்பானை சீசராகவும் கொண்டு
ஆட்சி செய்து வந்தனர்.
கலேரியு, கலாபனையைத் தொடர்ந்தும் வந்தான்.
கி. பி. 311 அளவில்
மண்ணை எண்ணவும்
விண்ணை அளக்கவும் முயலும்
தனது முட்டாள்தனத்தை அவன் உணர்ந்து கொண்டான்.
அதனால்
கலாபனையைத் தணிக்கக் கட்டளை பிறப்பித்தான்.
தனது உடலில் ஏற்பட்ட
பெரும் நோயொன்றைத் தீர்க்க
கிறிஸ்தவர்களின் செபத்தை நாடி நின்றான்.
சிறிது காலத்தின் பின்
அந்த நோய்க்கே அவன் இரையாகிப் போனான்.
இதற்கிடையில்
கி. பி. 306 இல்
கொன்ஸ்தான்ஸ் குளோர் இறந்து போக
அவனது மகன் கொன்ஸ்ரன்ரைன் ஆட்சிக்கு வந்தான்.
அவனது இராணுவம் அவனுக்கு
'அகஸ்துஸ்' பட்டமளித்து
சக்கரவர்த்தி எனக் கொண்டாடியது.
இந்நிகழ்ச்சி
ஏற்கனவே கிழக்கில்
'அகஸ்துஸ்' பட்டம் பெற்றிருந்த
மாக்சிமியனின் மகன் மாக்சென்சின்
சினத்தீயை மூட்டி விட்டது.
பொறியாய் ஆரம்பித்த நெருப்பு
மிகப்பெரும் அதிகாரப் போட்டியாய் உருவெடுத்தது.
மாக்சென்ஸ் கொன்ஸ்ரன்ரைன் மீது
படையெடுக்கத் திட்டமிட்டான்.
இதையறிந்த கொன்ஸ்ரன்ரைன்
தானே படையெடுத்து
உரோமையை நோக்கி முன்னேறினான்.
கி. பி. 312 ஐப்பசி 28 இல்
மில்லியன் பாலத்தில்
இருபடைகளும் பெரும் போரில் பொருதின.
எண்ணிக்கையும், பலமும் பெரிதாயிருந்த போதிலும்
மாக்சென்சின் படை தைபா நதியில் மூழ்கடிக்கப்பட்டது.
போரிற்குச் செல்லும்போது
வானத்தில் ஒளிரும் சிலுவை ஒன்றைக் கண்டதாகவும்,
அதன் கீழ்
'இவ்வடையாளத்தால் வெற்றி கொள்வாய்' என்று
படித்ததாகவும்
அன்றிரவே இயேசு கனவில் தோன்றி
சிலுவையடையாளத்தை தாங்கிச் செல்லப் பணித்ததாகவும்
அவ்வாறு செய்த்தால்தான்
இவ்வதிசயிக்கத்தக்க வெற்றி கிட்டியதென்றும்,
பாரம்பரியம் கூறுகிறது.
எவ்வாறாயினும்
கொன்ஸ்ரன்ரைனின் இவ்வெற்றி
கிறிஸ்தவர்களின் வெற்றியென்றே கொள்ளத்தக்கது.
இவ்வெற்றியின் பின்
கொன்ஸ்ரன்ரைன்
கிறிஸ்தவர்களுக்கு மிகவும் சார்பாயிருந்தான்.
தனது பகுதியிலும்
மாக்சிமியனை அழித்து
கிழக்கில் பூரணக்கட்டுப்பாட்டுடன் இருந்த
லிசினசின் பகுதியிலும்.
கிறிஸ்தவர்களுக்குச்
சகல உரிமைகளும், சிறப்பும்
கிடைக்க வேண்டுமென்று அவன் விரும்பினான்.
அதனால் லிசினசுடன்
கி. பி. 313 இல் அவன் ஒரு உடன்படிக்கை செய்தான்.
இதுதான்
திருச்சபையின் வரலாற்றில் பெரிதும் பேசப்படும்
'மிலான் அரச சாசன' மாகும்.

—சந்திரன்—

# பொதுநிலையினருக்கான இறையியற் கற்கைநெறி

யாழ். மறைவட்ட திருச்சபையின் நன்மைகருதி பொதுநிலையினருக்கான கற்கைநெறி ஆரம்பிக்கப்பட இருப்பது பற்றிய செய்திகள் முன்னர் வந்துள்ளன,

இதை நடத்துவதற்கான காரணங்களாவன:

1. பொதுநிலையினருக்காக நடத்தப்பட்ட பல கருத்தரங்குகளின் முடிவில் இவ்விடயம் அவர்களால் எழுப்பப்பட்டு தங்களுக்கும், விசேடமாக பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருப்போருக்காவது இறையியல் கற்றுத்தரும்படி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது, அதாவது இது இன்றைய மக்களின் கருத்தும் தாகமுமாக இருக்கின்றது. (Vox populi) எனவே, அதைப் பூர்த்தி செய்வது ஒரு கடமை.

2. மறுபுறம் 2–ம் வத். சங்கத்தின் பின் திருச்சபையின் ஆட்சி பீடமும் பொதுநிலையினரை வளர்க்கவும் அவர்களின் தரத்தை எழுப்பவும் கடமைப்பட்டுள்ளது. வழிபாடுகளில் கொடுக்கப்படும் அறிவு எல்லோருக்கும் போதுமானதல்ல, திருச்சபையின் போதனைகள் பற்றியும் கோட்பாடுகள் பற்றியும் ஒரு சில பொதுநிலையினராவது ஒழுங்குமுறையில் புகட்டப்பட வேண்டும்.

3, கொழும்பில் பொதுநிலையினரின் இறையியல் கல்லூரியிலும் சமூகத்திற்கும், மதத்திற்குமான நடுநிலையத்திலும், கண்டியிலும், இப்படியான பாடநெறிகள் நடத்தப்படுகின்றன. இங்கும் வேதாகம வகுப்புகள், மறை ஆசிரியர் பயிற்சி போன்ற வழிகளில் ஓரளவு இத்தேவை பூர்த்தி செய்யப்படுகின்றது. இது ஒரு புதிய, மேலும், ஆழமான, பரவலான மக்களுக்கானதும், வதிவற்றவர்களுக்கானது மான (non-residential) முதல் முயற்சியாகும்.

1, நோக்கு: பொதுநிலையினர் திருச்சபையின் வாழ்வில் கூடிய செயற்பாடு கொள்ள ஊக்குவித்தல்.

2. எமது சூழலுக்கேற்ப இறையியலைக் கற்றலும் அதன் வழியாக எமது வாழ்வு, பிரச்சனைகளுக்கேற்ப இறையியலை நமதாக்குதலும்.

3, இதுகாலவரை திருச்சபையின் ஆட்சியாளர்களினது தனிச்சொத்துப்போல் இறையியல் இருந்தது. இறைவார்த்தை, ஒழுக்கம், கோட்பாடு, தொடர்பான இந்த இறையியல் செல்வங்களைப் பொதுநிலையினருடன் பகிர்ந்து இறைமக்களின் நன்மைக்காகவும், வளத்திற்காகவும் பரவலாக பயன்படுத்த வழிவகுத்தல்.

4. திருச்சபையில் பொதுநிலையினர் மத்தியில் வழிகாட்டிகளாகவும், பணியாளர்களாவும். திகழுவோர், மலர இருப்போருக்கு, தங்கள் செயற்பாடுகளுக்கு தேவையான அறிவையும் ஆற்றலையும் பெற உதவுதல்.

5. பொது நிலையினரின் உலகியல் பின்னணியில் உருவாகி அவர்களால் வழங்கப்படும் மதிப்புகள், கருத்துகள் வழியாக இறையியலை வளமாக்குதல். இதனால் பொதுநிலையினர் பற்றிய இறையியல் மாத்திரமல்ல, மக்கள் அல்லது சுதேச இறையியல், சொந்தச் சூழலைப் பின்னணியாகக் கொண்ட, அதற்குப்பொருத்தமான இறையியலும் (Indigenous theology or contextual theology) வளர்ச்சிபெறும்.

6, மக்களின் மொழியாகிய தமிழில் நடத்தப்பட இருப்பது ஆசிரிய, மாணவ இருசாராருக்கும், திருச்சபையின் நடைமுறை வளர்ச்சிக்கும் பயனுள்ளது.

வழிமுறைகள்:—

1. முறைசார் விரிவுரைகளோடு கலந்துரையாடல்கள், பகிர்தல்கள், கட்டுரைப் பயிற்சிகள் மூலம் கருத்துக்கள் பிறப்பிக்க, வளர்க்க ஆழமாக்கப் படமுடியும். அதாவது குருமடத்தில் நடப்பது போலல்லாது பயிற்சிபெறுவோரும் பங்களிக்கும் பயிற்சி முறையாகும்.

2, எம்மைச் சூழ நிகழும் அல்லது தாக்கத்தை ஏற்படுத்தும் பொருத்தமான விடயங்களை முன்வைத்து இறையியல் அடிப்படையில் ஆராய்ந்து கலந்துரையாடல்.

3. பொநிலையினரிடையே இருக்கும் மூலகங்கள், ஆற்றல்களும் பாவிக்கப்படும்.

4. ஒரு சுருக்கமான நெறியாகையால் பாரம்பரிய பாடத்தலைப்புகளுக்குப் பதிலாக சற்று அகன்ற வட்டாரங்களாக, அல்லது களங்களாக பிரித்துப்பொதுநிலையினருக்கு பிரயோசனமான பகுதிகளில் கவனம் செலுத்தி அணுகப்படும்.

அரைஆண்டு

5. இருவாரங்களுக்கொரு முறை வசதியான இரு தொடர்நாட்களில் நடைபெற இருக்கின்றது.

தற்போதைய நிலை:

இதிற் பங்குபற்ற பலர் விண்ணப்பித்திருந்தனர். ஓரளவுக்குச் சமமான தரமுடையோராயிருந்தால் யாவருக்கும் நலமாகையால் நேர்முகப் பரீட்சை மூலம் தெரியப்பட்டு ஆனி 9–ம் திகதி காலை இந்நெறி ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

எதிர்பார்ப்புக்கள்:

இது ஒரு இலவச சேவை. ஆனால் பங்குபற்றியோருக்கு திருச்சபையின் ஆட்சிப்படி முறையில் யாதேனும் தர, நிலை உயர்வுகளுக்கு தானாக வழி வகுக்காது. ஆனால் அவர்கள் செயற்பாடுகளும் முதிர்ச்சியுமுள்ள கிறிஸ்தவர்களாக வளர உதவும்.

வேறு களங்களிலோ, தேவைக்கோ இதன் மூலம் பெறப்படும் தராதரப்பத்திரத்துடனான அறிவு உதவலாம்.

இதன் முன்னேற்ற அடிப்படையில் வருடாவருடம் இப்படியான அல்லது மேலும் வளர்ச்சியுடைய நெறியை தொடர்ந்து நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்நெறிமட்டில் உள்ளடக்கத்திற்குப் பொறுப்பு புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர்களை முக்கியமாக உள்ளடக்கிய ஆசிரியர் குழு.

நிர்வாகத்திற்குப் பொறுப்பு:

யாழ் மறைவட்டப் பொதுநிலையினர் கழகமும், அதன் ஞானவழிகாட்டியும், குரு முதல்வரும் அ. ம. தி,யுமான அருட்தந்தை S. A. மைக்கல் சாமியும.

**அ சந்தியாப்பிள்ளை**
யா.ம.வ.பொ.நி.க. செயலர்

## குருசு முத்தண்ணையின் கிசு கிசு — 67

அன்னம்மா: எங்க ஊர்த் திருவிழா முடிய பெரிய கொண்டாட்டம் இருக்கும் வாங்க அண்ணே?

குருசு முத்தண்ணை: என்ன அப்பிடி பெரிசா நடக்குது அன்னம்?

அன்னம்: விளையாட்டுப் போட்டியள், பெரிய கோஷ்டியின்ர பாட்டுக்கச்சேரி எல்லாம் பெரிசா இருக்கும் அண்ணே!

குருசு: அடி பிள்ள விளையாட்டுப் போட்டி பாட்டுக்கச்சேரியளோட சமய அறிவுப்போட்டியளும் நடாத்தி அதில தெரியிறவையளைப் பாராட்டி ஊக்குவிச்சா மறைந்து கிடக்கிற திறமையளையும் பாக்கலாம் எல்லோ பிள்ள.

அன்னம: இதுகளெல்லாம் பள்ளியில செய்விக்கினம் தானேயண்ணே.

குருசு: அங்க செய்யினம் என்ற சாட்டுச்சொல்லாம நீங்களும் இதைச்செய்தா என்ன? நல்லதை விதைச்சா தானே நல்லதைப் பெறலாம். முதல் நன்மை படிப்போட முழு சமயப் படிப்பும் முடிஞ்சுதோ? ஆலய விழாவிலயும் நல்ல அறிவை ஊட்டப்பாருங்களன்,

## அமைதி

நிரந்தர அமைதி விரும்பும் மனிதன் தனக்கும் இறைவனுக்கும் உள்ள உறவை மாத்திரம் சீர்ப்படுத்தல் போதாது. சமுதாய மக்கள் அனைவருடனும் எவ்வித வேறுபாடுமின்றி அன்புறவு கொள்ளுதல் வேண்டும். பிறர் எமக்குச் செய்யும் தீங்குகளை மன்னித்து சகோதர மனப்பான்மையோடு நாம் அன்புறவை வளர்க்கும் போது அது நம்முள்ளத்தில் ஆழமான அமைதியைத் தோற்றுவித்து இறைஒன்றிப்புக்கு நம்மை இட்டுச்செல்லும்.

# உறவில் மலரும் இராகங்கள்

சிறுகதை

பால் மணம் மாறாதபால் வடியும் முகங்களாக பார்ப்போரைக் கவர்ந்திழுக்கும் இரு பச்சிளம் பாலகர்களின் புகைப்படம் அந்தச்சுவரில். புன்னகை பூத்த முகத்தோடுவிளையாடிக் கொண்டிருக்கும் உலகமே அறியாத அந்தச் சிறுவர்கள் உள்ளத்தில் ஏதோ சுமை தாங்கியது போன்ற பிரமை. எதிரில் தேனீர் கோப்பையுடன் தன் குழந்தை எழிலை சுதா ரசித்துக் கொண்டிருக்கிறாள் போலும். அவர்கள் வாழ்வின் நீரோட்டத்தில் நீங்காத நினைவலையாகத் தொடரும் ஒரு சோகக்கதை.

வாழ்வுச் சோலையிலே, எல்லையில்லா மகிழ்விலே, எண்ணிறந்த செல்வத்திலே, இன்பத்தென்றலில் ஆடி அசையும் மலர்களாக வாழ்ந்த ஆனந்—ஜசிந்தா, பெற்றோரின் ஆசிகளோடு இணைந்த இரு உள்ளங்கள். 'நாம் இருவர் நமக்கிருவர்' என்ற கூற்றுக்கு இலக்கணம் அமைக்கும் வண்ணம் சுகந்தனும், சுதாவும் அவர்களின் அன்புக் குழந்தைகள். நாளடைவில் விதி வரைந்த பாதை வழியே பயணம் தொடரஆரம்பித்தது ''பணம் பத்தும் செய்யும்'' என்றான் அன்றொருவன். இன்றோ இவன் பணத்தின் பெருமிதத்தால் மாறாத குடிகாரனாகி ஈற்றில் தனது குடியினாலேயே தன்னை மரண அரக்கனுக்கு உணவாக்கினான், இரண்டு குழந்தைகளுடனும் தாயின் அரவணைப்பில் வாழ்ந்த ஜசிந்தா மன அமைதிக்காக வெளிநாடு சென்றாள். அங்கு யாரோ ஒரு வெளிநாட்டவனோடு தன்னை இணைத்துக் கொண்டாள். அன்றோடு வேரறுந்த மரங்களாக வாழ்கின்றனர் சுகந்தனும், சுதாவும்.

சுதா என்று அழைத்தவாறே அருகில் அமர்கிறான் சுகந்தன். பணத்தில் மட்டுமன்றி படிப்பிலும் சளைத்தவளல்லாத சுதா பல்கலைக்கழகப்படிப்பை முடித்து விட்டாள். காலாகாலத்தில் தன் தங்கைக்கு ஒரு நல்ல துணைவனைத் தேர்ந்தெடுக்க துடியாய்த்துடித்தான் தனயன், அவனது முயற்சிகள் வீண்போகவில்லை. தனது தேர்விற்கு சுதாவின் பதில் காணவே அருகில் அமர்ந்திருந்தான் சுகந்தன். அண்ணனிலேயே அன்னையைக் காணும் சுதா என்னதான் சொல்வாள். ''அண்ணா உன்னுடைய விருப்பப்படியே செய்கிறேன்'' என்று கூறி மௌனமாகத் தலை குனிந்தாள். நல்லநாள் பார்த்து, குணத்தோடு, குலமும் சேர நீதிமன்றத்தில் வக்கிலாக வேலை செய்யும் சங்கரை சுதாவிற்கு மணம் முடித்து வைத்தான் சுகந்தன்.

காலங்கள் உருண்டோடின. தன் தங்கை மாடி வீட்டு பஞ்சணையில் மகிழ்வுடன் துயில் கொள்வதில் மனம் நிறைந்த பூரிப்புடன் நகரத்தின் வீதியிலே காரில் சென்று கொண்டிருந்தான் சுகந்தன். ஆனாலும் இடையிடையே தமது பெற்றோருடன் வாழ்ந்த இளமைப் பராயத்தின் நிகழ்வுகள் அவன் கண்களில் நிழலிட்டன. கணப்பொழுதிலேயே தன்னிலை மறந்தவனானான். திடீரென விழித்தான். எதிரே வந்த வாகனத்தை விலத்த முடியாதவனாகி விபத்திற்கு ஆளானான். மயக்கமடைந்த அவன் சுயநினைவிற்கு மீண்டும் திரும்பியபோது, வைத்தியசாலையில் ஒரு காலிழந்த நொண்டியாக உடல் முழுதும் காயங்களுடன் இருப்பதை அறிய முடிந்தது. வழிப்போக்கரால் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட சுகந்தன் தாதியரின் பராமரிப்பில் ஓரளவு குணமடைந்தவனாக ஆனாலும் நொண்டியாக ஊன்றுகோல்களின் துணையுடன் தங்கையின் வீட்டையடைகிறான்.

வழக்கத்திற்கு மாறாக அனைத்துகதவுகளும் தாழிட்ட நிலையிலிருப்பது ஒரு நிமிடம் அவனைச் சிந்திக்கச் செய்கிறது. ஆனாலும் மனதைத் தேற்றியபடி வீட்டு வளவினுள் நுழைகிறான். அழைப்பு மணி அழுத்தியை அழுத்தி, தங்கையின் வரவை ஆவலோடு எதிர் நோக்கினான். கதவு திறக்கப்பட சங்கரே வருகிறான். வந்ததும் வராததுமாக, சுகந்தனை வாசலிலிருந்து விலகும்படி சொல்லாமல் சொல்பவனாக, ஏதோ பூகம்பம் வெடிப்பது போல வார்த்தைகளைத் தீக்கணைகளாக அள்ளிச் சொரிகிறான். அருகில் 'அத்தான், அத்தான்' என ஓலமிட்ட வண்ணமாக தரையில் சாய்ந்தாள் சுதா. தன்னிலும் மேலான பாசத்துடன் ஆரம்பித்த சங்கரின் மண வாழ்வு இவ்வளவு விரைவில் நிலை குலைந்து போனதை நம்ப முடியாதிருந்தது விபரம் அறியாத சுகந்தனுக்கு உள்ளம் உடைவது போன்ற உணர்வு ஆனாலும் சங்கரின் வார்த்தைகளிலிருந்து உண்மையை ஓரளவு உணரவும் அவனால் முடியாமலில்லை. இத்தனைக்கும் காரணம், நொண்டியும் அவலட்சணமுமான சுகந்தனை சங்கர் தன் மைத்துனனாக ஏற்க மறுத்ததுதான். நஞ்சு கலந்த உமிழ்நீரை முகத்தில் பெற்றுக் கொண்ட உணர்வுடன் அசைந்தான் சுகந்தன். மயக்கம் தெளிந்த நிலையில் எழுந்த சுதா கணவனையும் மீறி 'அண்ணா அண்ணா' என அலறியவாறு ஓடோடி, தள்ளாடி நடந்து சென்ற தமையனைக் கட்டியணைக்கிறாள். எதிர்கால எண்ணமின்றி, தாலி கட்டிய கணவனோடு வாழ்வதிலும் சீராட்டிய அண்ணனோடு வாழ்வதில் தனித்துவமான இன்பத்தை சுவைத்தவளாக சுகந்தனோடு செல்ல முயன்றாள். தன் முன்னே, பத்து வயதில் எவ்வாறு சுதா இருந்தாளோ, அதே நிலையில் இன்றும் எதையுமே சிந்திக்காதவளாக நிற்பதைக் கண்டுமன முடைந்து கண்ணீரைச் சொரிந்தான் சுகந்தன். அவன் தொடர்ச்சியாக அவள் உதட்டிலிருந்து புறப்படும் 'அண்ணா அண்ணா' என்ற வார்த்தைகளைத்தடுக்க எத்தனையோ அறிவுரைகள் எடுத்துச் சொல்லியும் ஏற்க முடியாதவளாக இருப்பதைக்கண்டு சிலையாகினான்.

இந்நிலையில் குணத்தில் கர்ணனான சங்கர் தன் சிறிய தாயால் அடிமைப்படுத்தப்பட்டு அவளுக்காக அந்த சகோதரங்களைப் பிரித்து வைத்து வேடிக்கை பார்க்கும் நிலையை எண்ணி வருந்தினான். தொடர்ந்தும் மனதில் உறுதி பூண்டவனாக, அவர்களண்டை சென்று இருவரையும் இரு கரங்களால் கட்டியணைக்கிறான்.

அன்பினை அனுதினம் பருகுவதும்; ஆனந்த இராகங்கள் பாடுவதும்; இன்புற்ற இதயமாய் மலருவதும்; ஈகை நெஞ்சினராய் மாறுவதும்; உறவில் மலர்ந்த இராகங்களே! எனும் கவிதைச் சுரங்கள் வானலைகளில் இசை மீட்டிச் செலகின்றன.

❋❋❋❋❋❋❋❋❋❋

ம. லூட்லின் கிறிஸ்ரா
தி. கு. க. மடம்
யாழ்ப்பாணம்

❋❋❋❋❋❋❋❋❋❋

## இளம் தலைமுறைக்கு ஏற்பட்டுவரும் பாரம்பரியப் பற்று

(ஒரு விமர்சனக் கண்ணோட்டம்)

கடந்த 4–5–90 அன்று புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் தனிநாயகம் தமிழ்மன்றம் தனது மூன்றாவது ஆண்டுவிழாவைக் கொண்டாடியது. அது தொடர்பாக இக்கருத்துரை கலைநிலாவில் இடம்பெறுகின்றது.

–மதி.

அதிவணக்கத்துக்குரிய மன்னார் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தனிநாயகம் தமிழ் மன்றத்தின்ஆண்டுவிழா நிகழ்ச்சிகள் இரு பகுதிகளாக இடம் பெற்றன. இடைவேளைக்கு முந்திய பகுதி கல்லூரியின் உள்ளரங்கத்தின் மட்டுப்படுத்தப்பட்ட விருந்தினர்களுடன் நடைபெற்றது. ஆண்டறிக்கை, உரைகள் பரிசளிப்பு போன்ற மாமூலமான நிகழ்வுகளுடன் ஒரு சில சிறிய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அவற்றுள் குறிப்பிடப்பட வேண்டியது இறுதியில் இடம் பெற்ற 'முளைக்குமா? வளருமா?' என்ற கவிதா நிகழ்வாகும். கவிதா நிகழ்வின் கரு மிகவும் உயர்ந்ததாக இருந்தாலும் திருச்சபையின் கலைக் கொள்கையையும் ஆயரும், அதிபரும் தமது உரைகளில் விளக்கிய பின்பு கலைத்தன்மை குறைந்து கருத்துப் பெருக்கம் நிறைந்து காணப்பட்ட கவிதா நிகழ்வு மனதை நெருடியது.

விழாவின் உச்சமாக இடம் பெற்றது, மாலை 7 மணியளவில் கல்லூரியின் வெளியரங்கில் இடம்பெற்ற 'வித்துக்கள்' நாட்டுக்கூத்தாகும், இந்நாட்டுக்கூத்து அரங்கேற்ற நிகழ்ச்சி ஒரு தனித்த முயற்சியாக அல்லாமல் இன்று வடக்குக் கிழக்கில் பரவி வரும் 'நாட்டுக்கூத்து அலை'யில் பொருத்திப் பார்க்க வேண்டிய ஒரு விடயமாகும். கடந்த காலத்தில் தாழ்த்தப்பட்டோருக்கு என ஒதுக்கப்பட்டிருந்த நாட்டுக்கூத்துக். கலை இன்று பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக்கழகத்திலும், மேடையேறுவதும் மாணவர்களாலேயே ஆடப்படுவதும் கலை சமூக எழுச்சிக்கும், சமூக எழுச்சி கலைக்கும் எவ்வாறு துணைபோக முடியும் என்பதற்கு நல்ல உதாரணமாகும்.

நாவலர் அடியொற்றிய சைவவேளாள குழாம் நாட்டுக்கூத்தை வெறுத்தொதுக்கிய போது அக்கலைக்கு உயிர் கொடுத்தவர்கள் கத்தோலிக்கர்கள். இன்று எல்லோரும், இக்கலையின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள வேளையில் கத்தோலிக்கர் ஓய்வுகொள்ளவில்லை என்பதற்கு திருமறைக்கலாமன்றத்தின் செயற்பாடுகளும், குறிப்பாக குருத்துவக்கல்லூரியின் இம்முயற்சியும், சான்றுகளாகும்.

குருத்துவமாணவர்கள் நாட்டுக்கூத்தை அரங்கேற்றினர் என்பதில் மகிழ்ச்சிக்குரிய இன்னுமொரு விடயம் என்னவென்றால் இன்று நாட்டுக்கூத்துக் கலையில் பயிற்சியும், சுவையும், பெற்ற அவர்கள் நாளை தமது பணித்தளங்களில் நாட்டுக்கூத்துக் கலையையும், அதன வழிமறையையும் வளர்க்க முயல்வர் என்பதாகும்.

கூற்றுப் பிரதியில் சில குறைகள் இருப்பதும், நெறி வாழ்க்கையில் மெருகூட்டல் சாத்தியமாயிருப்பதும் உண்மையேயாயினும் அது இம்முயற்சியின் முக்கியத்துவத்திற்கு எவ்வித பங்கத்தையும் ஏற்படுத்தவில்லை. ஆகவே நடிகர்களும், இம்முயற்சியில் ஈடுபட்ட அனைவரும் குறிப்பாக மன்றத்தலைவர் அருட் சகோதரர் ஜோர்ஜ், காப்பாளர் அருள்திரு. கிறிஸ்ரியன் வாஸ் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள்.

— சத்தியன்.

# நூல் வெளியீட்டு விழா

''மாற்றி வைக்கப்பட்டுள்ள வழிகாட்டிப் பலகைகளைக் கண்டு மயங்கி இன்றைய கிறீஸ்தவ மக்கள் பாதை மாறிச் சென்று கொண்டு இருக்கின்ற சூழ்நிலையில் திரு. ஜீவரட்ணம் (ஜீவஅண்ணன்) அவர்கள் தன் 'வந்து பாருங்கள்' நூலின் மூலமாக சரியான பாதையைச் சுட்டிக் காட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அவர் நாஸ்திகராயிருந்து கத்தோலிக்கரானதால் இந் நூல் சேற்றில் மலர்ந்த செந்தாமரை என்பேன்''

இவ்வாறு கடந்த சனிக்கிழமை யாழ் தொடர்பகத்தில் நிகழ்ந்த 'வந்து பாருங்கள்'' நூலின் வெளியீட்டு வைபவத்தின்போது ஆசியுரை வழங்கிய அருள்திரு. ஜெபநேசன் அடிகளார் கூறினார்.

தொடர்ந்து கருத்துரை வழங்கிய அருள்திரு. ஜெயசீலன் அடிகளார் ''கத்தோலிக்கத்தைப்பற்றிய பல்வேறு சந்தேகங்களுக்கு இந்நூல் பதில் கூறமுனைந்துள்ளது. பதில்கள் ஆழமானவையாக இல்லாவிட்டாலும், எம் போன்றவர்கள் செய்ய வேண்டியதை இந்நூலாசிரியர் துணிந்து செய்தது வரவேற்கத் தக்கதும், எமக்கு ஒரு தூண்டு கோலாகவும் உள்ளது. இத்தகைய முயற்சிகளுக்கு ஊக்கம் கொடுக்க வேண்டியது நம் கடமையாகும் என்றார்.

நூலாசிரியர் பதிலுரை வழங்குகையில் ''பொதுநிலையினரால். பொதுநிலையினருக்காக எழுதப்பட்ட நூலாகையால் பதில்கள் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டன. உலகின் 200கோடிக்கும் மேலான கிறீஸ்தவர்கள் தம் உயிருக்கும் மேலாக மதிக்கும் வேதாகமம் ''கடவுளின் வார்த்தைதானா? என்ற கேள்விக்கு இடமேற்பட்டதால் இந்நூல் இன்று அத்தியாவசியமாகக் காணப்படுகிறது' என்றார்.

நூலின் முதல் பிரதியை வைத்திய கலாநிதி மட்டுவில் பிலிப்பு ஜே. பி. அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். வரவேற்புரையை அ. அமர்தராஜ் (ஆசிரியர் சென். பற்றிக்ஸ் கல்லூரி) வழங்கினார். இறை வணக்கத்தினை செல்வன் அ. மதிநாயகமும், தமிழ்த் தாய் வணக்கத்தினை செல்வன் கி. ஞானசீலனும் இசைத்தனர்.

இவ்விழாவுக்கு அருள்திரு. ச. யோ. பிரான்சிஸ் அ. ம. தி. தலைமை தாங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆண்டவனின் அரவணைப்பில்

''நான் தினமும் திருநூலைப் படித்து வந்தேன். ஒரு நாள் மிகவும் கவலை கொண்டிருந்த போது திருநூலைத் திறந்தேன்''

''உன்னை நான் கைவிடமாட்டேன்'' என்ற வார்த்தைகள் கண்ணிற்பட்டன. அன்று முதல் இந்த இனிமையான தீவில் நான் தனிமையாக வசிக்க முடியுமென திடங் கொண்டேன்.''

றொபின்சன் குருசோவின் வாழ்க்கை ஏட்டில் என்னை மிகவும் கவர்ந்த வார்த்தைகள் இவை. அண்மையில் விபத்து ஒன்றில் அகப்பட்ட போது அந்தவார்த்தைகளின் உண்மையை நன்கு உணர்ந்தேன். மருத்துவ மனையில் இருந்த போது பல்வேறு சிந்தனைகளும் என் உள்ளத்தைச் சிதறடித்த வேளை எனக்குத் திடனும், நம்பிக்கையும், ஆறுதலும் தந்தவை அவை.

எம்மை நடத்துவது நாமல்ல, இறைவனே என்ற உண்மை எப்பயங்கர நிலையிலும் நம்பிக்கை அளிக்கும். ''உங்கள் தலையிலுள்ள மயிர்கள்கூட எண்ணப் பட்டிருக் கின்றன,'' எனத் திருநூல் கூறுகிறது.

ஆகவே எத்தருணத்திலும், எந்நிலையிலும் நாம் தனியாக விடப்படவில்லை. எம்மைப் பாதுகாக்கவும், வழிநடத்தவும் வல்லவர் ஒருவர் இருக்கிறார் எனத் திடங்கொள்வோம்.

''பிள்ளைக்குத் தந்தை ஒருவன். நம்மெல்லோருக்கும் தந்தை இறைவன்''

அமல்

# இறைவனுக்காக இறந்த வீர இளைஞன்




என் இனிய பீடப்பரிசாரகர்களே! உங்கள் பாதுகாவலராக விளங்கும் புனித ஞானப்பிரகாசியாரைப்பற்றி உங்களுக்கு நினைவுபடுத்த நான் விரும்புகின்றேன்.

அலோசியஸ் கொன்சாகா என அழைக்கப்படும் இவர் செல்வம் நிறைந்த உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர். அவர் தந்தை சமுதாயத்திலே உயர்ந்த பதவியை வகித்தவர். அலோசியஸ் பெலனற்ற நொய்மையான ஒரு குழந்தையாய் இருந்தபடியால் உடனே இறந்துவிடுவாரோ என அஞ்சினர். ஆனால் எல்லோரும் அதிசயிக்கத்தக்க விதமாய் அவர் வலுப் பெற்று வாழ்ந்தார். இதனால் ஆறுதலடைந்த பெற்றோர் இறைவனுக்கு நன்றி கூறினர். செல்வம் நிறைந்த கொண் சாகா என்னும் மாளிகையில் சிறுவன் அலோசியஸ் வாழ்ந்து வந்தான். ஆனால் சுகபோக வாழ்வில் அவன் மனம் செல்லவில்லை. தனது ஆன்மீக வாழ்வைப் பெரிதாக எண்ணி சிறிய வயதிலேயே தவமுயற்சிகளில் ஈடுபட்டான். பெற்றோருக்கு இது வியப்பாகவே இருந்தது. அலோசியஸ் இப்போது நற்பண்பு உள்ள இளைஞனாக வளர்ந்து விட்டான்.

பத்து வயதாய் இருக்கும்போது புளோறன்ஸ் பட்டினத்தில் உள்ள ஆலயத்தைத் தரிசித்து புனித மரியாளின் திருச் சுருபத்தின் முன் வேண்டினார். தன் வாழ்நாள் முழுவதும் கன்னிமையைக் காப்பாற்ற கிறீஸ்துவுக்கு வாக்களித்து, இவ் வாக்குறுதியை நிறைவேற்ற மரியாளின் உதவியை நாடி மன்றாடிய அலோசியஸ், பதினாறு வயதானபோது தந்தையின் அனுமதியைப் பெற்று அண்மையிலிருந்த இயேசுசபை மடத்தில் சேர்ந்தார். அவரது அதிபர்கள் அவர் மட்டில் மிகுந்த திருப்தி அடைந்தார்கள். அவரது பயபக்தியையும் நற்பண்பையும் பாராட்டினார்கள். அவர் எல்லோருக்கும் முன்மாதிரிகையாக விளங்கினார். இறைவனைத் தியானிப்பதற்கும், செபிப்பதற்கும் விரும்பினார். பல தப முயற்சிகளை மறைவாகச் செய்தார். நல்ல தந்தையாகிய இறைவனுக்கெதிராக மனிதர் செய்யும் பாவங்களை எண்ணியபோது மனமுடைந்து அழுதார். இளைஞருக்காக அதிகம் வேண்டிக் கொண்டார்.

1591இல் இத்தாலி தேசத்தில் ஒரு கொள்ளை நோய் பரவியது. நோயால் பீடிக்கப்பட்டவர்களைப் பராமரிப்பதில் ஞானப்பிரகாசியாரும் ஒருவராய் இருந்தார். சேவையின் ஆர்வம் அவரிலே பற்றியெரிந்தது. இறுதியாக அவரும் அக் கொள்ளை நோயால் பாதிக்கப்பட்டார். மரணப்படுக்கையின்போது உலகத்தின் பாவங்களுக்காக கண்ணீரோடு மன்றாடினார். இவ்விதமான வாழ்க்கை இன்றைய இளைஞர் சமூகத்திற்கு ஓர் அறைகூவல் அல்லவா! ஆன்மீக வாழ்வு மனித இயல்புக்குப் புறம்பானதொன்றல்ல. அது மனிதனின் இறுதிக் குறிக்கோள் ஆகும். இறுதியாகப் புனித ஞானப் பிரகாசியார் தம்மை இறைவனுக்கு அர்ப்பணித்தார்.

எனவே பீடப்பரிசாரகத் தலைவர்களே! இறைவன் உங்களிடம் ஒப்படைத்த மந்தைகளை இப்புனிதர் வழியாக இறைவனிடம் கொண்டுசெல்ல முன்னின்று செயற்படுங்கள்.

நீங்கள் ஒவ்வொரு வாரமும் இப்புனிதரின் பெயர் கொண்ட கூட்டத்தை ஆரம்பிக்கும்போது, இவருக்குத் திருவிழா எடுக்கும்போது இவருடைய பெயரால் செபியுங்கள். இவரது துணையை நாடுங்கள். இவர் வழியாக இறைவன் உங்களிடம் கொடுத்த பணியை திறம்படச் செய்து நீங்களும் உங்களை இறைவனுக்கு அர்ப்பணித்து வாழ வேண்டுகின்றேன்,

ப. ஞானராஜ்
மடுமாதா சிறிய குருமடம்,
மன்னார்.

# நாளை மலரும் பூக்கள்

மாணவ மணிகளே!
உங்கள் .... ....
மா பெரும் காலம்
கல்விக்காலம்.
நீங்கள்
கசடறக் கற்று
கற்பது போல்
வாழ ........
மக்கள் மனதில்
நாளை .........
மலரவிருக்கும்
பூக்கள் நீங்கள் .........

உழைப்பின் தோழா ......
நீங்கள்
உருளும் உலகில்
ஊழியம் பெற்று
செலவு செய்து
மிகுதியை
மிச்சப்படுத்தி
உயர்வான நோக்கில்
உத்தமர்களாக
வாழ .........
மக்கள் மனதில்
நாளை
மலரவிருக்கும்
பூக்கள் நீங்கள் .........

யா. யூலன் குருஸ்
பேசாலை.

# சிந்திக்க சில வரிகள்

ஒரு வேடன் மரத்தில் உட்கார்ந்து இருக்கும் ஒரு பறவையை வேட்டையாட முயலுகிறான். அப்பொழுது அவனுடைய கண்களுக்குப் பறவை மாத்திரம் தெரியவில்லை. மரம், கிளை, இலை, பூ, காய்,பழம் முதலியனவும் தெரிகின்றன. என்றாலும் அவனது மனநிலை அவனது கண்களின் லட்சியம் முழுவதும்அப்பறவையின் மேல்தான் நன்றாகப் பதிகிறது. அதேபோல் உலகில் உள்ள எல்லா பொருட்களையும் பார்த்தாலும், உண்மைப் பொருளான இறைவனாகிய ஆண்டவரைப் பார்ப்பதையே (அடைவதையே) எமது மனதினதும் லட்சியமாக கொள்ள வேண்டும்.

யே. மேரி றாபினா
தும்பளை




## முதலிரவும் கன்னித்தன்மையும்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

நம்மில் அநேகர் நம்புவதுபோல் திருமணத்தை அடுத்துவரும் முதலிரவில் முதன்முதலில் இடம்பெறும் தாம்பத்திய உறவின்போது பெண்ணுறுப்பிலுள்ள சவ்வு கிழியாதிருப்பதாலும், இரத்தக் கசிவு தென்படுவதாலுமே அவள் கற்புடையவள், பழுதற்ற கன்னி என்று உறுதிப்படுத்தலாம் என்று எண்ணுவது முடிவுசெய்வது முற்றிலும் தவறானது. உடற்கூற்று தத்துவத்தின்படி முதன் முதலில் இடம்பெறும் உடலுறவின்போது இரத்தக்கசிவு ஏற்படாதிருப்பதும் சாத்தியமே. எனவே மணப்பெண் கன்னி என்பதை நிரூபிக்க முதலிரவன்று நடைபெறும் தாம்பத்திய உறவின்போது படுக்கையில் விரிக்கப்படும் துணியில் இரத்தக்கசிவு காணப்படவேண்டும் என்ற நிபந்தனை-கோட்பாடு— முற்றிலும் ஆதாரமற்றது. எனவே தம்பதிகள் எவரும் இப்படியான வெறுக்கத்தக்க அருவருப்பான இழிவான வழக்கத்துக்கு இணங்கக் கூடாது. அதை ஏற்றுக்கொள்ளவும் கூடாது. இவ் விடயம் முற்று முழுதாக தம்பதிகளின் அந்தரங்கமான விடயமாகும்.

## கவனிக்கப்படவேண்டியசில குறிப்புக்கள்

1. கலவியின்போது நிகழும் பரஸ்பர செயற்பாடுகள் பற்றி வரையறை செய்யப்பட்ட விதிமுறைகள் எதுவுமே இல்லை. ஒவ்வொரு தம்பதியினரும் அனுபவவாயிலாகவும், புரிந்துணர்வின் அடிப்படையிலும், போதிய விளக்கத்தோடும் தத்தமக்கு பரஸ்பரம் திருப்தியைத் தரக்கூடிய பொருத்தமான முறைகளைக் கண்டறிந்து தாம்பத்திய உறவிலே அவற்றைப் பிரயோகிப்பதே சிறந்தது ஏற்றுக்கொள்ள முடியாத, ஒவ்வாத நடைமுறைகளை ஒருவர் மேல் ஒருவர் திணிக்கவோ பலவந்தப்படுத்தவோ கூடாது. உடலுறவு அடிக்கடி வைத்துக்கொள்ளலாமா? எப்போது தவிர்க்கப்பட வேண்டும்? விரும்பியபோதெல்லாம் கலவியில் ஈடுபடலாமா? என்பது சதிபதியினரின் தேவை, உடல்நிலை, சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு அமைவாகவே இருக்கும். இங்கும் பலாத்காரம் இருக்கக்கூடாது. வேறு தம்பதியினர் எப்படி நடந்து கொள்ளுகிறார்கள்? அவர்களுடைய அனுபவங்கள் எப்படிப்பட்டது என்று ஒப்பு நோக்கி செயற்பட நினைப்பது, நன்மையை விட தீமையையே விளைவிக்கும்.

2. உடலுறவுக்குத் துணையான அதனோடு சம்பந்தப்பட்ட வேறு சில விடயங்களிலும் போதிய கவனஞ்செலுத்தப்பட வேண்டும். அதாவது சதிபதிகளின் உடற்தூய்மை, அந்தரங்கத்தன்மை, உடல் நலம், உடலுறவுக்கேற்ற மனோநிலை என்பவற்றில் சிரத்தைக் காட்டப்படவேண்டும்.

3. குறிப்பிட்ட நாளில் கணவனோடு பழகிக் கொள்ளும் விதத்தைப் பொறுத்தே உடலுறவின் போது ஒரு பெண்ணின் நிலைப்பாடு அமைந்திருக்கும். முந்தியதன் குழப்பநிலை அல்லது ஒவ்வாநிலை பிந்தியதைப் பெரிதும் பாதிக்கும். ஆணைப் பொறுத்தவரை அன்றைய புறநிகழ்வுகள் தாம்பத்திய உறவோடு (உடலுறவோடு) தொடர்புபடுத்தப்படுவதில்லை.

4. மது போதையில் அல்லது ஓரளவு மதுமயக்க நிலையில் உள்ள கணவனோடு உடலுறவு வைததுக் கொள்ள மனைவிமார் விரும்பமாட்டார்கள். அதை மிகவும் வெறுக்கிறார்கள். மது பாலுணர்வை மிகுதிப் படுத்துமேயொழிய உடலுறவுச் செயற்பாட்டைக் குறைத்துவிடுகிறது அல்லது தளர்வுறச் செய்கிறது.

# சிறுமையும் பெருமையும்

ஆலமரம் : நானே பெரியவன் என்னால் எட்டுத்திக்கையும் பார்க்க முடியும்.

ஆமை : எட்டுத்திக்கும் தானே பார்க்க முடியும் எட்டி நகரமுடியாதே?

ஆலமரம் : ? ? ?

D. ரட்ணராஜ்
இளவாலை

# அருள்வாக்கு அறிவோம்

## நற்செய்திக்கோர் பின்னணி — 14

**மாற்கு நற்செய்தி நூலில் கிறிஸ்துவைப்பற்றிய வெளிப்பாடுகள் — 1**

**முன்னுரை:**

கடவுளின் மகனாகிய இயேசுக்கிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தி என்று தொடங்குகின்றது மாற்கு நற்செய்தி – இயேசு யார்? அவருடைய பணியின் தன்மை என்ன? என்பன பற்றியெல்லாம் விரிவாக நூலில் எழுதப் போவதை முதல் வரியிலேயே அறிவித்து விடுகின்றார் ஆசிரியர். தொடர்ந்து திருமுழுக்கு அருளப்பர் பற்றிய செய்திகள் வருகின்றன. 'நான் அல்ல அவர்' ''என்னைவிட வல்லவர் ஒருவர் எனக்குப் பின் வருகின்றார்.'' அருளப்பரின் வாயில் வெளிப்படும் வார்த்தைகள் நமது நோக்கை இயேசுவின் பக்கம் திருப்புகின்றன.

**சீடர்கள் – ஆர்கள்:**

நூலின் அடுத்த பகுதி இயேசு சீடர்களை அழைப்பதுபற்றியது (1:16–20) தலைவர்கள், அறிஞர்கள், முனிவர்களைச் சுற்றி, தொண்டர்களும், சீடர்களும் வாழ்ந்துவருவது இயல்பானது. இயேசுதம் சீடர்களைப் பொறுக்கி எடுப்பதில் ஒரு தனித்தன்மையைக் காண முடிகின்றது – வா; இரு, போ (1:17.3:14;6–9) என்று அவர்களைப் பணிக்கும் பான்மை தொனிக்கும் அதிகாரம் எல்லாம் நோக்கும் போது எல்லோரையும் போல் இவரும் ஒரு போதர் என்று கூற முடிவதில்லை. தொடர்ந்து படிக்கும் போது பேய்களைப்பற்றி குறிப்புகள் நான்கு இடங்களிலும் (1:13;1:32–34;1:39;3:11–12) அசுத்த ஆவிகளைவிரட்டுவதுபற்றி நான்கு இடங்களிலும் (1:21-28;5:1–24;7:25 30;9.14 29) காணப்படுகின்றது. இப்பகுதிகள் ஆழமான மறைஉண்மைகளைக் கொண்டிருக்கின்றன. விவிலியத்தில் அசுத்த ஆவிகள், இறைவனுக்கும், மனிதனுக்கும் எதிராகச் செயற்படும் சக்திகளாகவும், இறையரசு இவ்வுலகில் நிறுவப்பட இடையூறாக நிற்கும் தடைச்சுவர்களாகவும் அறிவிக்கப்படுகின்றன. அவரை எதிர்ப்படுகின்ற போதெல்லாம், அவை சக்தியிழந்தவைகளாகவும், அச்சம், திகில், நடுக்கம் மேலிட்டவைகளாகவும் காட்டப்படுகின்றன. இயேசு கடவுளின் பரிசுத்தர் என்று அவை அறிந்திருந்தன. இயேசுவோ அவற்றை விரட்டிவிடுகின்றார். அவையும் அவரைப்பணிகின்றன. அசுத்த ஆவிகளை வெல்லவந்தவர், வெல்லும் சக்தி பூண்டவர், வென்றவர் இத்தகைய இயல்பைக் கொண்டவர் யாராக இருக்க முடியும்? ''மெசியா'' தானே!

S. அந்தோனிப்பிள்ளை

அறிந்துகொள்ளுங்கள் (109)

## வரலாற்று அரசியல் பின்னணி

ஆளுநர்கள்.–

உரோமை அரசியல் யூதர்களின் சமயச்சடங்குகளுக்கு மதிப்புக் கொடுத்தது. யூதர்களின் பொதுச்சங்கம் யூதமுறைப்படி நீதி வழங்க மரணதண்டனை வழங்க அதிகாரம் இருந்தும் அதை நிறைவேற்ற உரோமை அதிகாரியின் ஒப்புதலைப் பெற வேண்டும். சில ஆளுனர்களின் தவறான செயல்களினால் யூதர்கள் பல இன்னல்களை அனுபவித்தனர். சீரிய அரசப்பிரதிநிதி குவிரினஸ் தனது மாநிலத்துக்கு உட்பட்ட மக்கட் தொகையறிய விருப்பிகணக்கெடுப்பு நடத்தினான். இதை யூதர்கள் எதிர்த்தனர். கிளர்ச்சி எழுந்தது. தீவிரவாதிகள் போராடினார்கள் ஆளுனன் கோப்போணியஸ் தனது படைபலத்தால் கிளர்ச்சியை அடக்கினான்.

யூதேயாவின் நான்காவது ஆளுனன் கிராட்டஸ் பதிவியிலிருந்த பெரிய குருவை நீக்கி விட்டு தான் விரும்பி வேறு ஒருவரை பெரியகுருவாக நியமித்தான். அப்படி நியமிக்கப் பட்டவனே அன்னாசின் மருமகனாகிய யோசேப்பு கைப்பாஸ் இப்படியாக சமயச்செயல்களில் தலையிடாதிருப்பதற்கு காரணம் தமது விருப்பம்போல் நீக்குதல்.

யூதேயாவின் ஐந்தாவது ஆளுனன் போஞ்சுபிலாத்து. இவன் கி. பி. 26–36 முடிய பதவி வகித்தான். இவனை நாம் நற்செய்தியில் சந்திக்கிறோம். இவன் கொடுமைத் தன்மையும் இரக்கமற்ற கடின இதயமுமுடையவன். ஆட்சியில் ஊழல் நிறைந்திருந்தது. அகந்தையும், தற்பெருமையுமுடையவன். மக்கள் வழக்கு விசாரணையின்றி மரணத்திற்கு தீர்வையிடப் பட்டனர்.

இவன் யூதமக்களின் மதவுணர்வையும், நாட்டுப் பற்றையும் புண்படுத்தும் காரியங்களைச் செய்தான். தனது படையை உரோமைச் சின்னங்களுடன் ஜெருசலேமுக்குள் நுழையச் செய்தான். நகருக்கு வேண்டிய நீர் கால்வாய்களை அமைப்பதற்கு ஆலயப்பணத்தைச் சூறையாடினான். ஒருமுறை கலிலேயாவிலிருந்து வந்த திருப்பயணிகளை அவர்களுடைய பலிப்பொருட்களுடன் கொன்றான். (லூக். 13:1).

இ. ம. ஜெயசீலன்

## அரபாத் அன்னை திரேசாவை சந்தித்தார்

**யூக்கன் ஏப், 18**

பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசர் அரபாத் இந்தியாவுக்கு வருகை தந்தபோது அன்னை திரேசாவை சந்தித்து உரையாடினார். ஜெருசலேமிலும் பெத்தலகேமிலும் இரு இல்லங்களை திறக்குமாறு அவர் அன்னை திரேசாவிடம் வேண்டுகோள் விடுத்தார். அன்னைக்கு அவர் யேசுவின் பிறப்புவேலைப்பாடு செய்யப்பட்ட பெத்தலகேம் நட்சத்திரத்தையும், வேறு சில பொருள்களையும் பரிசாக அளித்தார்.

## அரசாங்க அனுமதியோடு திருவழிபாடு

**யூக்கன் ஏப், 18**

வியட்நாமிலுள்ள நா டிராங் மறை மாவட்டத்தில் 15 வருட இடைவெளிக்குப்பின் மூன்று குருக்கள் திருநிலைப்படுத்தப் பட்டனர். 1975 முதல் குருத்துவ திருநிலைப்படுத்தல் அனைத்திற்கும் அரசாங்கத்தின் அனுமதி பெறவேண்டியிருக்கின்றது.

இம்மூன்று குருக்களும் 1976 க்கு முன்னரே தமது பயிற்சியை முடித்துக் கொண்டாலும், இதுவரை அவர்கள் குருவாவதற்கு அரச அனுமதி கிடைக்கவில்லை.

## திட்டமிடல் கூட்டம்

**வத். மே. 23**

உலக ஆயர்பேரவை குறித்து திட்டமிடுவதற்கான கூட்டத்தை நடத்த திருத்தந்தை 2ஆம் அருள். சின்னப்பர் அழைப்பு விடுத்துள்ளார். யூன் 5–7 வரையிலான இக் கூட்டத்தில் ஐரோப்பாவிலுள்ள ஆயர் பேரவைகளின் தலைவர்கள், தேசிய பேரவைகளைச் சாராத ஆயர்களின் பிரதிநிதிகள் ஐரோப்பிய சமுதாய அவையின் ஆயர்கள் அவைப் பிரதிநிதிகள் மற்றும் கிழக்கத்தேய திருச்சபைகளின் பிரதிநிதிகளும் பங்கு கொள்வர் இன்னும் சில துறவற சபை அதிபர்கள் மற்றும் திருப்பீட அதிகாரிகளும் கலந்து கொள்வர்.

நீண்டகாலமாக கம்யூனிச ஆட்சியில் வாயடைக்கப்பட்டிருந்த கிழக்கு ஐரோப்பிய ஆயர்கள், தங்கள் அனுபவங்கள், பிரச்சனைகள் மற்றும் தேவைகளைப் பகிர்ந்து கொள்ள இப்பேரவை உதவும் என்று உலக ஆயர் பேரவையின் பொதுச் செயலர் பேராயர் யால்கோஸ் கூறினார்.

ஐரோப்பாவிற்கான சிறப்பு ஆயர் பேரவை அடுத்த ஆண்டில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 4<br>சுடர்: 18 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |

**விழி வழி:**

### பிறர் பொருள் போற்று

''உன்னைப் போல் உன் அயலவனை அன்பு செய்,'' இது ஆண்டவரின் அருள்வாக்கு.
இன்று எம் மத்தியில் வார்த்தையால் சொல்லி
வாழ்வில் எதிரிடையாக வாழ்பவர் தொகை அதிகம்.

பிறர் பொருளை எடுத்தல், உடைத்தல் போன்ற செயல்கள் அன்புச் செல்வங்கள் மத்தியில் அதிகரித்து வருகின்றன. இது ஏன்?

அன்புக் கண்மணிகாள்!

உங்கள் வாழ்வில் நீங்கள் எப்படி பிறர் பொருள் போற்றும் பண்பினை அனுசரிக்கிறீர்கள் என ஆராய்ந்து பாருங்கள். உங்கள் ஆய்வுக்கு உறுதுணையாக பின்வரும் வினாக்களைக் கேட்டுப் பாருங்கள்.

1) உன் செயலால் உன் நண்பனுக்கு ஏற்பட்ட துன்பத்தை எண்ணிப் பார்த்தாயா? நீ செய்த அதே செயலை உன் நண்பன் உனக்குச் செய்திருந்தால் நீ என்ன செய்திருப்பாய்?

2. பள்ளிக் கூடத்திலுள்ள நூலகப் புத்தகங்களை நீ எவ்வாறு பயன்படுத்துகிறாய்?

3. உன் வகுப்பில் குப்பையும் கூளமும் நிறைந்திருந்தால் நீ என்ன செய்கிறாய்?

4. குடிநீரை எவ்வாறு பயன்படுத்துகிறாய்?

5. வரிசையில் நின்று செயல்பட வேண்டிய வேளையில் நீ எப்படி செயல்படுகிறாய்?

அன்புக் கண்மணிகாள்!

காவலன் கண்மணிகளைப் படித்து பெற்ற பயனைப் பலருடன் பகிர விரும்பினால் சுருக்கமாக எழுதி அனுப்புங்கள்.

அன்பின்
அன்பு விழி

### சிரிக்க சிந்திக்க:

**மதிய உணவு:**

மூன்றாம் ஆண்டு படிக்கும் தீபன், பதினோராம் ஆண்டு படிக்கும் அண்ணனிடம் கேட்டான்,

''அண்ணே! உனக்கும் எனக்கும் ஓரளவு வரும்படி தானே!''

அண்ணன் தம்பியை முறைத்துப் பார்த்துவிட்டு ''கொஞ்சம் பொறு அவசரப்படாதே. அடுத்த மாதம் எனக்கு வரும்படி கூடக்கூடும்''

''சரி பாப்பமே'' என்று கூறிக்கொண்டு தம்பி ரியூசனுக்கு ஓடினான்.

**சிரிக்க சிந்திக்க எழுதுங்கள்.**

### கொஞ்சம் சிரியுங்களேன்

ஆசிரியர்: டேய் ராமு! துன்பத்திலிருந்து தப்பிக்க ஏதேனும் இருவழி சொல்லு.

ராமு: முதலாவது, நீங்கள் பாடத்திலே கேள்வி கேட்டால் தலையை இடிக்குது என்று சொல்லித் தப்பிக்கலாம். இரண்டாவது நீங்க, வீட்டுக் கணக்கு ஏன் செய்யவில்லை என்று கேட்டால் என்னுடைய அண்ணனுக்கு நேரமில்லை என்று சொல்லித்தப்பலாம் போதுமா சேர், இன்னும் சொல்லட்டுமா?

* * *

தந்தை (ஆசிரியரிடம்): சேர் என் மகன் வீட்டிலே சொல்வதைக் கேட்கின்றதே இல்லை. எதிர்த்தே பேசப் பழகிட்டான்.

ஆசிரியர்: ஏண்டா; அப்பா சொல்வதெல்லாம் உண்மை தானா?

மகன். அப்பா இதுவரைக்கும் உண்மையே பேசியது இல்லை சேர்.

அங்: எண்–B 137

த. ஜெனிவி பெர்னாண்டோ

# வித்துக்கள் விமர்சனத்துக்கு பதில்

## கலைநிலா தொடர்ச்சி

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

யோ' என்ற காத்தான் கூத்துப் பாணியாகிய திரு. சின்னமணியின் மெட்டையும் எனது நாட்டுக்கூத்தில் முதல் முதலில் அறிமுகம் செய்தேன். இது கிறீஸ்தவ தமிழ் மக்கள் எமது பாரம்பரிய தேசிய கலைவடிவங்களை தொடர்ந்து காப்பாற்றி வருவார்களென்றுகாட்டவே இதில் புகுத்தினேன்.

எனது நாடகம் அங்கம் 14 உடன் முடிய வேண்டியது 18 வரை இழுபட்டுச் செல்லுகின்றது என்ற வாதமும் எழுப்பப்பட்டது. மன்னாரில் 700 கிறீஸ்தவர்கள் படுகொலை செய்யப்பட்டதும், புனித பிரான்சிஸ் சவேரியார் இலங்கைக்கு வந்ததும் வேண்டுமென்று சில வரலாற்று ஆசிரியர்கள் மறைத்திருக்கின்றனர். இதைத் துணிந்து வரலாறு உண்மையாகவே காட்டப்பட வேண்டுமென்பதற்காகவே, நான் எனது நாடகத்தை, ஆயர் திருத்தத்துடன் 18வரை இழுத்துச் சென்றேன்.

கவிஞர் தேவதாசன்
பாஷையூர்

## எழுதிச்செபியுங்கள் போட்டி 34

ஒரு செபம் எழுதி 1–7–90 ற்கு முன் ''பாதுகாவலன்'' அ. பெ. இல. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சிறந்த செபம் பத்திரிகையிற் பிரசுரிக்கப்பட்டு பரிசு ரூபா 25/= உம் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். பரிசு பெறுபவர் பெயரும், பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

**போட்டி 33 இல் பரிசு பெறும் செபம்**

### புனிதத் தன்மையின் உணர்வுக்குத் திரும்ப ...

அகிலத்தை ஆண்டு வழிநடத்தும் பரம்பொருளே இறைவா! குற்றங்கள் பலபுரிந்து உமது உறவைத் துண்டித்து பாவச் சேற்றில் அமிழ்ந்து விட்ட எம்மை மீண்டும், மீண்டும் உமது அருட்கரத்தால் ஆதரித்து வருவதற்கு முதற்கண் உமக்கு நன்றி கூறுகின்றோம். இரக்கத்தின் ஊற்றாகிய தேவனே! உமது இரக்கத்தை நாடி நிற்கும் எம்மைக் கடைக்கண் நோக்கியருளும். மாந்தர்கள் அனைவரும் உலக சுகபோகங்களில் மூழ்கி உலகமும் உலக இன்பங்களும் மாத்திரமே மெய்யென்றும், கடவுளோ மறுமையோ இல்லையென்றும் மனம் போன போக்கிலே வாழ்ந்து தமது புனிதத்தன்மையை இழந்து வருகின்றார்கள். இவர்களை யேசுவே! உண்மையினால் அர்ச்சித்துத் தூயவர்களாக வாழ உமது அருளை ஈந்தருளும் ஆமென்!

பே. மேரி பிறேமா, நுணசை வீதி, மாதகல்.

## ஆண்டவனைத் தேடுகின்றேன்...

நெப்டியூனை வலம் வரும் வாஜேயர் நானல்ல,
கடுகளவில் கணக்கினை முடிக்கும் கம்பியூட்டரும் நானல்ல,
கயல்விழியை கலங்க வைக்கும் காமுகனும் நானல்ல,
சமுதாய சந்தையிலே குப்பையென எறியப்பட்டவள்.

**ஏனெனில்**
கால்காசுக்கும் வழியில்லாத ஈழகுடிமகள் நான்.

**எனவே**
ஆலய வளாகங்களில் என்குரல் கேட்பதில்லை.
அதிசய விளக்குகளில் என்முகம் தெரிவதில்லை.
நன்கொடை பட்டியலில் என்பெயர் இடம்பெற மறுக்கிறது.
பொருளாதார ஏணியில் ஏறி அரசியல் மேடையில் குரல் எழுப்ப என்வாய் மறுக்கிறது.
சமுதாய சங்கீதங்களில் மௌன ராகங்களை இசைக்கிறேன்.

**அன்றொருநாள்**
இறை இல்லங்கள் வியாபார கூடங்களாக்கப்பட்டதைக் கண்ட இயேசுவின் இதயம் கனலாய் எரிந்தது.

**இன்று**
வட்டிக்கடனை அடைக்க ஆண்டவனைத்தேடி அலையும் உள்ளங்கள்—
ஆண்டவனை அயலான் சிரிப்பில் காண்பதில்லை
வியர்வையால் மண்ணை அபிஷேகம் செய்யும் வறியவனில் காண்பதில்லை.
கருவறையினைக் கல்லறையாகக் காணும் கள்ளமில்லா உள்ளங்களில் காண்பதில்லை.

**எனவே தான்**
நம் ஆலயங்களின் இசை புயல் காற்றால் அடித்து செல்லப்படுகிறது.
கொட்டு மேளங்கள் மேகங்களின் கூட்டத்தை கலைத்து விடுகிறது.
வேட்டுக்கள் ஆகாய மீன்களை ஆராய சென்றுவிடுகின்றது.
அர்ச்சனைகள் கடலில் கரைத்த காயமாகிவிடுகின்றது.

**என்றைக்கு**
உன் அயலான் உன் இதயத்தில் இடம் பெறுகின்றானோ
உன் இதயம் நீதிக்காகப் போராடத் துடிக்கின்றதோ
உன் கரங்கள் அனாதைகளுக்கு ஆதரவளிக்கின்றதோ

**அன்றுதான்**
நீ ஆலயத்தில் ஆண்டவனைக் காண்பாய்!

செல்வி பிறேம் குணரட்னம்
பத்தாவத்தை,
இளவாலை.

## 1-ம் ஆண்டு நினைவு



திரு. ஜோசப் அய்யாராஜ்
பர்னாந்து

அன்னை மடியில்
**19–03–1933**
ஆண்டவன் அடியில்
**17–06–1989**

என் நாட்களோ நிழலைப் போல் சாய்ந்து போயிற்று. ஆயினும் என் சகோதர சகோதரிகளே நீங்களாயினும் என்னை மறவாதீர்கள்.

ஆண்டவன் பாதம் சென்று ஆண்டு ஒன்று மறைந்தாலும் எம் அகங்களில் இருந்து உம் நினைவுகளோ அகலாது. ஐயா! கொடையில் சிகரமெனச் சிறப்பாக வாழ்ந்தாய் ஐயா! உற்றார் உறவினரின் உறவுகளை வளர்த்தாய் ஐயா இன் சொல்லேயன்றி வன் சொல்லையறியாத இனியவனே! உம்மை நாம் இழந்து விட்டோம்.

விளையாடும் விதியின்கை விழுந்திடாமல் எம்மைக் கண் கொண்டுபார்த்திடுவாய். காலமெல்லாம் எம்முடன் தெய்வமாய் இருந்திடுவாய்.

இவரின் பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், மாமா, மாமி, சகோதர, சகோதரிகள், மைத்துனர், மைத்துனிமார்.**

இல 82, கல்லூரிவீதி,
கொட்டாஞ்சேனை
கொழும்பு A/123

# 1990களை நோக்கி.......
# தூரத்துப்பார்வை
## அமதிகள் மாநாடு

இப்பகுதியில் வெளியாகும் கருத்துக்கள் சிந்தனைகளுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்

### போர்க்காலக் குழந்தை!

தனித்துவம் பெறத் துடித்த வடபகுதி அமதிகளின் நியாயமான கோரிக்கை, 1982 ஆம் ஆண்டு கண்டியில் நடைபெற்ற அமதிகள் மாநாட்டில் புதைக்கப்பட்டுவிட்டது, என்று முன்னர் (காவலன், 05.04.90 – இல. 5) எழுதியிருந்தோம், ஆனால், அரசியல் சூழல் மிகச்சிக்கலாக மாறிய போர்க்காலத்தில் (கார்த்திகை 1983) வடபகுதி அமதிகள் ஓர் ஆணைப் பேராண்மையாகத் (Delegation) திடீரென உருவாக்கப்பட்டு உரோமையில் உள்ள அமதிகளின் தலைமைச் செயலகத்தின் நேரடிப்பார்வையின் கீழ் (வடபகுதி அமதிகளுக்கு) அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.

கொழும்பு மாகாணம் தனது முதிர்ந்த வயதில் (142 ஆண்டுகள்), அரசியல் கொந்தளிப்பினால் மிகவும் பாதிக்கப்பட்ட வேளையில் அதிகரித்த பிரசவ வேதனையில், காலம் முந்திய நிலையில் ஒரு வயிற்றறுப்புப் பிரசவம் (Caesarean) மூலம் இந்த புதிய ஆணைப்பேராண்மையை (Delegation) பெற்றெடுத்தது. ஆகவே, யாழ். அமதிகள் ஆணைப் பேராண்மை ஒரு போர்க் குழந்தை என்பதை வாசக அன்பர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

போர்க்காலக் குழந்தையின் வளர்ச்சி அப்போரின் சூழலில் பாதிக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் நிறைய உண்டு என்பது சமூக உளஇயலாளரின் ஏகோபித்த முடிவாகும். கடந்த ஏழு ஆண்டுகளாக இப்பகுதியில் (வடகிழக்கு) நடைபெற்று வந்த கொடிய கொலைகள் மனிதாபிமானமற்ற சித்திரவதைகள், பொருளாதாரச் சீரழிவு, இவற்றினால் ஏற்பட்ட உளவியல் தாக்கங்கள் இக் குழந்தையின் ஆரம்ப வளர்ச்சிக்கு மிகவும் பாதகமாகவே அமைந்தன. மேலும், ஆணைப் பேராண்மை பிறந்த இக்காலப்பகுதியில், வடபகுதி அமதிகளுக்கு ஏற்பட்ட ஒரு பெரிய அதிர்ச்சி நிறைந்த தாக்கத்தினால் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள்.

அருள்திரு. சிங்கராயர், அ. ம. தி. அவர்களின் விடுதலைப் போராட்ட ஈடுபாடுகளினால் ஏற்பட்ட தாக்கங்கள் அமதிகளின் புதிய ஆணைப் பேராண்மையை பாதிக்காமல் இல்லை, ''தந்தையில்லாத ஒரு குழந்தையாக'' வடபகுதி அமதிகள் சில காலம் தவித்தார்கள். இவற்றையெல்லாம் மனதில் கொண்டுதான் அமதிகளின் ''தடுமாற்றம்'' என்று முன்பு குறிப்பிட்டேன். இவையெல்லாம் சாதாரணமான பிரச்சனைகள் அல்ல. ஒரு புதிய ஆணைப்பேராண்மை வளர இத் தாக்கங்கள் தடைகளாகவே அமைந்துவிட்டன.

ஒரு தனி மனிதனின் அல்லது மனுஷியின் தனித்துவமான ஆளுமை வளர்ச்சிக்கு அவனது/அவளது முதல் ஆறு—ஏழு ஆண்டுகள் மிக முக்கியமானவையென்றும், அவை ஆளுமையின் அத்திவாரமாக அமையும் ஆண்டுகள் என்றும் உளஇயலாளர் கருதுகிறார்கள். ஒரு தனிமனிதனது உளவியல் நிலைப்பாட்டை ஒரு நிறுவனத்திற்கும் (Corporate body) ஒப்பிட்டுக் கூறலாம். இப்படி அ. ம. தி.கள் ஓர் ஆணைப் பேராண்மையாக உருவாகிய காலந்தொட்டே அவர்களது ஆணைப் பேராண்மை பாதிப்புக்குள்ளாகியது. இப்படிப்பட்ட ஒரு நிலைமையில், வடகிழக்குப் பகுதியின் மிகவும் இருண்ட காலமாகிய கடந்த போர்க்காலத்தில் இந்த ஆணைப் பேராண்மையின் முதலாவது முதல்வராக அருள்திரு. லூயி பொன்னையா, அ. ம. தி. அவர்கள் நியமிக்கப்பட்டார். அவரது தலைமையில் இந்த ஆணைப் பேராண்மை சிக்கிச் சிதறாது, குலைந்து அழியாது ஒரு நிறுவனமாக நின்று பிடித்தது, முதல்வருக்கு ஒரு பாராட்டு, வடபகுதி அமதிகள் அனைவருக்கும்— அதிலும் சிறப்பாக இளம் அமதிகளின் அர்ப்பணத்திற்தும், விசுவாசத்திற்கும் ஓர் எடுத்துக்காட்டும் ஆகும்.

இப்படிப்பட்ட ஒரு பிண்னணியில்தான் ஒரு மாநாட்டின் அவசியத்தை 1988 ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் கூடிய கூட்டத்தில் அமதிகள் நிலை நாட்டினார்கள். ஒரு பத்தாண்டு முடிந்து இன்னோர் பத்தாண்டு துவங்கி உள்ளது. ஒரு யுகம் முடிந்து இன்னொன்று ஆரம்பிப்பது போன்ற ஒரு தோற்றம். இந்த இடைக்காலத்தில் நின்று கொண்டுதான் அமதிகள் 1990 களை நம்பிக்கையுடன் எதிர்நோக்குகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழலில் இந்த மாநாடு நடைபெறுவது எவ்வளவு பொருத்தமானது. (வளரும்)

கரவையூர்ச்செல்வம்

பாதுகாவலன்
PATHUKAVALAN

# குருநாகல் பங்குச் சபைகளில் இளைஞர், பெண்கள்

யூக்கன், மே 11.

பங்குச்சபைகளில் வருங்காலத் திருச்சபையாகிய இளைஞருக்கு இடம் அளிக்கப்படவேண்டுமென குருநாகல் ஆயர் றேமண்ட் பீரிஸ் கூறியுள்ளார். இளைஞருக்கும் பெண்களுக்கும், கிறிஸ்தவ வாழ்வுக் குழுக்களுக்கும் பங்குச் சபைகளில் பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டுமென தமது மறைவட்டத்திலுள்ள பங்குகளுக்கு இவர் அறிவுறுத்தியுள்ளார்.

ஈராண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட இம்மறைவட்டம் சிங்கள இளைஞர் கிளர்ச்சிகளால் பெரிதும் பாதிக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

# தொழிலாளர் மத்தியில் திருத்தந்தை

வெரித்தாஸ் ஜூன் 3

திருத்தந்தை 2—ம் அருள் சின்னப்பரின் மோல்ட்டாப் பயணம் பற்றி மோல்டா பிரதமர் எட்வேட் அடம் வத்திக்கான் வானொலிக்கு அளித்த பேட்டியில் திருத்தந்தையின் வரவு மோல்டா மக்களுக்குத் திருப்தி காணுவதாக இருந்தது எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

புனித பொன் தீவில், மோல்டாத் தொழிலாளர்களின் பிரதிநிதிகள், திருத்தந்தையைச் சந்தித்து தங்களது பணி, வாழ்க்கை முறை, கொள்கைகள் மற்றும் தங்களது குடும்பங்கள் பற்றி உரையாடினர். திருத்தந்தை, தச்சனான நசரேத்தூர் யேசுவின் சிறப்புத் தூதுவராகத் தாம் அங்கு வந்திருப்பதாகக் குறிப்பிட்டு, மோல்டா தொழிலாளர்கள் தங்களது உழைப்பின் மூலம் இறையரசைக் கட்டியெழுப்பும் இறைதிட்டத்தில் ஒத்துழைப்பதைப் பாராட்டிப் பேசினார். மோல்டா உழைப்பாளர்கள் திருத்தந்தைக்கு விலை உயர்ந்த பரிசுப் பொருட்களை வழங்கித்தங்களது அன்பையும், நன்றியையும் வெளிப்படுத்தினர்.

மோல்டா'டாகோலி' தேசிய விளையாட்டு அரங்கத்தில் திருத்தந்தை மோல்டா இளைஞர்களை சந்தித்தபோது இன்றைய சமுதாயத்தில் இளைஞர்களின் பங்கு பற்றிச் சிறப்பித்தார்.

மேலும் யேசு கிறிஸ்துவின் உண்மைச் சீடர்களின் பண்புகளான புனிதம், நீதி, ஏழைகளுக்குத் தொண்டு, இவற்றிற்கு சாட்சிகளாக இருக்க மோல்டா திருச்சபை மோல்டா இளைஞர்களை அழைக்கிறது எனவும் திருத்தந்தை கூறினார்.

# பேராயர் உண்ணாவிரதம்

வெரித்தாஸ் ஜூன். 3.

இஸ்ரேலிலிருந்து நாடு கடத்தப்பட்டு, தற்போது ரோமில் வசித்துவரும் பேராயர் கப்புச்சி, பலஸ்தீனியர்களுக்கு விரோதமாக இஸ்ரேல் நாடு கடைப்பிடிக்கும் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் உண்ணாவிரதம் ஆரம்பித்தார். பேராயர், பலஸ்தீனிய கொரில்லாக்களுக்கு ஆயுதங்களைக் கள்ளக் கடத்தல் செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு 1977 இல் நாடு கடத்தப்பட்டார் என்பதும் தம்மீது சுமத்தப்பட்ட குற்றத்தைப் பேராயர் கப்புச்சி மறுத்தார் என்பதும் நினைவு கூரத்தக்கன.

# பரிசுத்த ஆவி விழாவன்று மறைபரப்பு தினச்செய்தி

வத்திக்கான் ஜூன் 3

குருக்களின் மறைப் பணி, மற்றும் குருத்துவப்பயிற்சி பற்றிய கருத்துக்களை இவ்வாண்டு அனைத்துலக மறைபரப்புத் தினத்திற்கான செய்தியில் திருத்தந்தை வெளியிட்டுள்ளார். 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20 ந் திகதி சிறப்பிக்கப்படும், இத்தினத்திற்கென திருத்தந்தை விடுத்த செய்தியில் குருத்துவப் பயிற்சி பற்றிய உலக ஆயர் பேரவை நடைபெறும் சமயத்தில் இந்நாள் சிறப்பிக்கப்படுகிறது என்று கூறி நற்செய்திப்பணிக்காகவே திருச்சபை இருக்கிறது எனவும் விளக்கியுள்ளார்.

ஒரு குரு உலகில் ஒரு பங்குக் குரு அத்துடன் அகில திருச்சபைக்கும்பணிபுரிய வேண்டியவர் என்ற உணர்வை வெளிக்கொணர்வதாகக் குருத்துவப் பயிற்சி அமையவேண்டுமென்று திருத்தந்தை தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார். குருக்களுக்குஅளிக்கப்படும் சாரமான பயிற்சியின்மூலம் கிறிஸ்தவசமூகத்திற்கு நல்லதோர் பணியை அவர்கள் ஆற்ற முடியும் எனக் கூறியுள்ள திருத்தந்தை ஏற்கனவே குருத்துவபணியைப் புரிந்து வருவோர் மீதான ஆயர்களின் கடமையையும் விளக்கியுள்ளார். இவ்வாண்டு தூய ஆவி விழாவன்று இச்செய்தியை வெளியிடுவதாகவும் இந்த 2000 ஆண்டுகளில் திருச்சபையின் மறைப்பணியை சீர்தூக்கிப் பார்ப்பதாகவும் திருத்தந்தை குறித்துள்ளார்.

# திருச்சபை ஊழியருக்கு நியாயமான ஊதியம்

யூக்கன். மே. 11

தென்னிந்திய மாநிலமான தமிழ் நாட்டின் 50 மறைமாவட்டக் குருக்கள் ஒன்றுகூடிய போது திருச்சபை ஊழியர்களுக்கு நியாயமான ஊதியம் அளிக்கப்படவேண்டுமென்றும், தொழில் புரியும் நிலைமைகள் சீர்திருந்த வேண்டுமென்றும் ஒரு கோரிக்கையை முன்வைத்துள்ளனர். அத்துடன் மறைமாவட்டங்களிலும், துறவற சபைகளின் மகாணப் பிரிவுகளிலும் ஊழியர்களின் முறைப்பாட்டைக் கேட்பதற்கு முறையீட்டு ஆணைக்குழுக்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர்.

## ஆண்டு நிறைவு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் 14ஆம் திகதி வணக்கத்துக்குரிய அருட்திரு சூசை அடிகளார் ஆரம்பித்து வைத்தார். யாழ் மத்தியசபைத் தலைவர் செலஸ்ரின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

ஆண்டு நிறைவு நாளன்று நன்றித்திருப்பலியும், பொதுக் கூட்டமும் நடைபெற்றது. திருப்பலியை பங்குத் தந்தை அருட்திரு ஞானரெத்தினம் அடிகளார் ஒப்புக்கொடுத்தார்.

# ஒலிம்பிக் அரங்கில் திருத்தந்தை

வத்திக்கான், ஜூன். 4

24 நாடுகள் கலந்துகொள்ளும் உலகக் கால்பந்துப் போட்டி இத்தாலியில் இம்மாதம் தொடங்கவுள்ளது, தொடக்கக்கட்டமாக றோம் நகர் ஒலிம்பிக் அரங்கத்தைப் திருத்தந்தை மே 31— ஆம் நாளான வியாழனன்று ஆசீர்வதித்தார். இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் இளைஞர்களுக்கு செய்தியையும் அளித்தார்.

''விளையாட்டில் ஆர்வமுள்ளவர்களின் கண்கள் உங்கள் மேல் பதிந்துள்ளன. உலகில் இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு நீங்கள் தேவதைகளாக அல்ல, தலைவர்களாக முன்னின்று வழிநடத்துபவர்களாக இருக்க வேண்டும் என்பதை நீங்கள் உணர்ந்திருக்க வேண்டும்'' என்றார். 13 கோடியே 60 இலட்சம் டொலர்கள் செலவில் இவ்வொலிம்பிக் அரங்கம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

# வெளிவந்துவிட்டது

''வழிகாட்டி'' என்னும் கத்தோலிக்க சஞ்சிகை மீண்டும் வெளிவந்துவிட்டது.

ஐநூறு பிரதிகள் மட்டும் இம்முறை அச்சிடப்பட்டுள்ள வழிகாட்டியில் பல்வேறு ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள் அறிக்கைகள் மூலம் விளக்கப்பட்டுள்ளன.

யாழ். மறைவட்ட ஆணைக்குழுக்களின் குரலாக ஒலிக்கவுள்ள வழிகாட்டியின் ஆசிரியராக அருள்திரு. ம. இ. பயஸ் அடிகள் பணியாற்றுகிறார். பங்குத் தந்தையவர்கள் மூலம் வழிகாட்டியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# நவாலி எஸ். ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வின்சென் டி போல் சபையைச் சேர்ந்த நவாலி புனித பேதுரு வானவர் பந்தியின் ஏழாவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தின்போது சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய அருள்திரு. M. யூஜின் அடிகள் தெரிவித்தார். மேற்படி கூட்டம் பந்தித் தலைவர் சகோ. சிறில் சுகந்தரன் அவர்கள் தலைமையில் நவாலி சென். பீற்றேஸ் பாடசாலையில் நடைபெற்றது.

திருமதி. J. யேசுதாசன் வரவேற்புரையை நிகழ்த்தினார். திருமதி. M. அன்ரனி குறூஸ், திருமதி. P. ஜோண் பிள்ளை, திருமதி. N. ஜேசுதாசன் ஆகியோர் முறையே செயலறிக்கை, ஆண்டறிக்கை, பொருளறிக்கை ஆகியவற்றைச் சமர்ப்பித்தனர்.

நவாலியூர் சிறில் சுகந்தரன்

# ஊக்குவிப்புத்தேவை

மற்றைய புதினப் பத்திரிகைகளைத் தேடி வாசிப்பதைப் போல பாதுகாவலன் பத்திரிகையை மக்கள் தேடிப் பெற்று வாசிக்க மாட்டார்கள். அப்படித் தேடி வாசிப்போர் இல்லாமலில்லை. ஆனால் பெரும்பாலானவர்கள் சலிப்படைந்து போகின்றார்கள். ஏனெனில் திருச்சபையின் படிப்பினைகளும், போதனைகளும் கசப்பானவை. நாம் முயன்று சுவையூட்டிக் கொடுத்தாலும் இனிப்பூட்டப்பட்ட மாத்திரைகள் புறக்கணிக்கப்படுவதுபோல கைவிடப்படுகின்றன.

எனவே, அவற்றை வாசல்படி வரை கொண்டு சென்று வாசிக்கத் தூண்டும்படி அனைத்து மறை ஆர்வலர்களையும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம். ஊக்குவித்து பணிபுரியும் அனைவருக்கும் எமது நன்றிகளும், பாராட்டுக்களும்.

ஆ—ர்.

## வங்காலையில் ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திலும் பெருந்திரளாகக்கூடி, ஜெபமாலையில் ஈடுபட்டனர். 30ஆம் நாள் மாலை பங்குத் தந்தை அவர்களின் மறையுரையும்,நற்கருணை ஆசீரும் இடம் பெற்றன.

31ஆம் நாள் ஆலயத்தில் அன்னையின் விழாத் திருப்பலிப் பூசையைப் பக்திப்பரவசத்துடன் ஒப்புக்கொடுத்த வேளையிலே,அன்று என்றுமில்லாதவாறு நடைபெற்ற காணிக்கைப் பவனியும், திருவிருந்தில் கலந்து கொண்ட மக்கள் தொகையும் கரைகாணா ஆனந்த வெள்ளத்தை மக்கள் உள்ளத்துள் பாய்ச்சின.

ஆசிரியர்: உ. ஈ. மிரண்டா
வங்காலை.

# பொதுநிலையினர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்தமிழில் உரை நிகழ்த்தி அனைவரையும் வரவேற்றார்கள். மறைக்கல்வியில் கலாநிதியாகிய அருள்திரு. சாமிநாதன் அடிகளார் பொதுநிலையினரின் பணி விஸ்தரிக்கப்படவேண்டும் என உரையாற்றிப் பொது நிலையினர் இறைபணியில் ஆர்வத்துடன் உழைக்க உற்சாகமூட்டி ஊக்கப்படுத்தினார்கள்.

26ஆம் நாள் மாலை பேரவைத்தலைவர் சட்டத்தரணி திரு. யோண்தாசன் அவர்கள் தலைமையில் ஆரம்பமான பொதுக் கூட்டத்திலே தலைவர் அவர்களின் தலைமை உரையும்,ஓராண்டுகால அவை அறிக்கைளும் செயலாளர் திரு. யா. பென்சமீன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றன.

திரு. ஜி. ஈ. மிராண்டா

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 8ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல. QB/1001/58/81